# மக்களின் முன்னேற்றம்


புதிய நோக்கு

புதிய செயற்பாடு

**1989 பெப்ரவரி — 1993 ஒக்டோபர்**



சமாதானம்





ஒழுக்கம்



சுபீட்சம்

# மக்களின் முன்னேற்றம்

ஐ. தே. கட்சியின் கொள்கைகளும் செயற்றிட்டங்களும்
1989 பெப்ரவரி — 1993 ஒக்டோபர்

## *1992 ஆம் ஆண்டைத் தொடர்ந்து ..............................*

*ஐ. தே. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட வாக்குறுதிகளோடு தொடர்புபட்ட வகையில் இன்று வரையிலான அரசாங்கத்தின் பெறுபேறுகளைத் தெரிவிக்கும் விதத்தில், கொள்கைத் திட்டமிடல் செயற்படுத்துகை அமைச்சு தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் பிரசுரங்களில் இது 5 வது பிரசுரமாகும்.*

*இதுவரை மேற்கொள்ளப்பட்டதுபோல, இந்த பிரசுரத்திலும் சம்பந்தப்பட்ட சகல விடயங்கள் தொடர்பாகவும் திட்டவட்டமான தகவல்கள் பொது மக்களினதும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினதும் கவனத்திற்கென தரப்பட்டுள்ளன.*


*இந்தப் பிரசுரத்தை சகலரும் படித்து விளங்கிக்கொள்ள உதவும் விதத்தில் சுருக்கமான விளக்கங்களும் விளக்கப் படங்களும் வழமைபோல் இடம்பெற்றுள்ளன.*

*1993, நவெம்பர்.*

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| **சமயம்** | ... | ... | 1 |
| **வறுமை ஒழிப்பு** | ... | ... | 3 |
| சனசக்தித் திட்டம் | ... | ... | 3 |
| பிரதேச அபிவிருத்தியும் பன்முகப்படுத்தலும் | ... | ... | 5 |
| மக்கள் மயப்படுத்தலும் பொது வசதி அபிவிருத்தியில் அரச/தனியார் பங்களிப்பும் | ... | ... | 7 |
| மக்கள் மயப்படுத்தல் | ... | ... | 7 |
| மக்கள் மயப்படுத்தலும் பொது வசதிகள் அபிவிருத்தியில் அரச/தனியார் பங்களிப்பை அபிவிருத்தி செய்தலும் | ... | ... | 8 |
| **சுற்றாடல்** | ... | ... | 10 |
| **உற்பத்தியும் வர்த்தகமும்** | ... | ... | 11 |
| விவசாயம் | ... | ... | 11 |
| கடற்றொழில் | ... | ... | 13 |
| கால்நடை | ... | ... | 14 |
| பெருந்தோட்டங்கள் | ... | ... | 16 |
| கைத்தொழில் | ... | ... | 18 |
| புடவை, தைக்கப்பட்ட ஆடைகள் | ... | ... | 20 |
| வர்த்தகம் | ... | ... | 21 |
| இலங்கை முதலீடுகள் சபை (இ. மு. ச.) | ... | ... | 22 |
| **பொருளாதார வசதிகள்** | ... | ... | 24 |
| போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் | ... | ... | 24 |
| மின்சக்தி - எரிபொருள் | ... | ... | 26 |
| தபால், தொலைத்தொடர்புகள் | ... | ... | 27 |
| துறைமுகங்கள் - கப்பல் போக்குவரத்து | ... | ... | 28 |
| வீடமைப்பும் நிர்மாணமும் | ... | ... | 29 |
| நீர்விநியோகம் | ... | ... | 31 |
| காணிகள் | ... | ... | 32 |
| நீர்ப்பாசனமும் மகாவலியும் | ... | ... | 33 |
| வடமேல் மாகாண விசேட நீர் விநியோகத் திட்டம் | ... | ... | 34 |
| உல்லாசப் பிரயாணம் | ... | ... | 36 |
| **சமூக வசதிகள்** | ... | ... | 38 |
| கல்வி | ... | ... | 38 |
| சுகாதாரம் | ... | ... | 40 |
| கலாசார அலுவல்கள் | ... | ... | 42 |
| தொழிற்பயிற்சியும் இளைஞர் புனர்வாழ்வும் | ... | ... | 43 |
| பட்டதாரிகள் தொழில்நெறி ஒதுக்கீட்டுத் திட்டம் | ... | ... | 44 |
| புனர்வாழ்வும் புனரமைப்பும் | ... | ... | 45 |
| சமூக நலன் | ... | ... | 46 |
| மகளிர் விவகாரம் | ... | ... | 48 |
| **பொருளாதாரச் செயற்பாடு** | ... | ... | 49 |

# சமயம்



புத்த சாசனத்தைப் பாதுகாப்பதிலும், அபிவிருத்தி செய்வதிலும் புத்த சாசன அமைச்சு தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறது. புத்த சாசனம் சம்பந்தமான விடயங்களையிட்டு ஆராயவும், கலந்துரையாடவும் தேவையான நடவடிக்கைகள் உயர் ஆலோசனைச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1993 ஆம் ஆண்டின் மிக முக்கியமான நிகழ்ச்சி, இலங்கையில் புத்த சமயம் அறிமுகம் செய்ததாகக் கருதப்படும் அனுபுது மிகிந்த இங்கு விஜயம் செய்து 2300 ஆண்டுகள் நிறைவதைக் குறிக்கும் ஜயந்தி நிகழ்ச்சிகளாகும். இதற்கென 8 திட்டங்களை உள்ளடக்கிய விரிவான திட்டம் ஒன்றை ஆலோசனைச்சபை தயாரித்திருந்தது. முக்கியமான திட்டம், புதிய சமனேர பிக்குமாருக்கான "கெப்பகரு தாயக்க திட்டம்" ஆகும். இதனைத் தவிர, கார்ய சாதக நிதியத்தை ஆரம்பிக்கவும், ஒவ்வொரு விகாரைக்கும் ஆதரவளிக்கவென "விகார கார்ய சாதக சமித்தி" யை ஆரம்பிக்கவுமென உதவிகள் வழங்கப்பட்டன. இந்த இரு திட்டங்களுக்குமென ஒதுக்கப்பட்ட தொகை 30 மில்லியன் ரூபா. பௌத்த விவகாரத் திணைக்களத்தின் கீழ் 8,000 தம்மப் பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தக் காலப்பகுதியில் 17,00,000 க்கும் அதிகமான மாணவர்கள் இங்கு கல்வி பயின்றனர். பாடப் புத்தகங்களையும், உபகரணங்களையும் வழங்கவென 11 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. தம்மப் பாடசாலைகளின் அமைப்பிற்கும், மேற்பார்வைக்கும் பிராந்திய சாசனாரட்சக சமிதிகள் பொறுப்பாக உள்ளன. இவற்றிற்கு 4.8 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களும், ஏனைய பொருட்களும் வழங்கப்படுகின்றன. மேலும் 2 பௌத்த கலைக் களஞ்சியங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

1992 ல் ஆரம்பிக்கப்பட்ட புத்த சாசன நிதியம் ரூபா 48 மில்லியனாக அதிகரித்துள்ளது. விகாரைகளின் புனரமைப்புக்கும், பௌத்த நூல்கள், சஞ்சிகைகளின் பிரசுரத்துக்குமென இந்த நிதி செலவிடப்படுகிறது. செலவினங்களுக்குப் பொறுப்பாக இருப்பது அமைச்சின் ஆலோசனைச் சபையாகும்.

இந்து சமய கலாசார ராஜாங்க அமைச்சும் அறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்தியில் முக்கிய கவனம் செலுத்தியது. முந்திய வருடத்தில் 246 ஆக இருந்த அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை இந்த வருடத்தில் 446 ஆக அதிகரித்தது. தொண்டர் ஆசிரியர்களும் 1,316 ல் இருந்து 2,107 ஆக அதிகரித்துள்ளனர். பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் 32,615 ல் இருந்து, 57,530 ஆக அதிகரித்துள்ளது. சென்ற வருடம் அச்சிடப்பட்ட 3 விசேட பாடநூல்கள் இந்தப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டன.

மக்கள் விரும்பும் சமயப் பேருரைகள் ஒழுங்கான முறையில் இடம்பெற்றன. இந்த வருடத்தில் இந்துமதம் சம்பந்தமான 10 பேருரைகள் ஒழுங்கு செய்யப்பட்டன. பக்தி விழாவொன்றும் ராஜாங்க அமைச்சினால் முதற்தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டது. இசைப் பேருரைகளை நிகழ்த்துவதில் உலக நாடுகள் பலவற்றிலும் புகழ் பெற்ற திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் இந்த நிகழ்ச்சியின் போது பிரசன்னமாயிருந்தார்கள். இந்து சமயத்திற்கு மாபெரும் தொண்டாற்றிய 77 பிரமுகர்கள் இந்த விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால், கலாசார சஞ்சிகையான "கோபுரத்தின்" 2 இதழ்கள் வெளியிடப்பட்டன. இந்து கலைக்களஞ்சியத்தின் 2 வது தொகுதியும் வெளியிடப்பட்டது. 3 வது தொகுதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கி. பி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இலக்கிய நூலான "கோணேசர் கல்வெட்டு" வெளியிடப்பட்டது. மற்றுமொரு இலக்கிய நூலான திருக்கோணஸ்வரம் பற்றிய "தட்சிண கைலாச புராணம்" வெளியிடப்படுவதற்கென தற்சமயம் தயாரிக்கப்பட்டு வருகிறது. வெருகல் - கந்த சுவாமி கோவில், சித்தாண்டி - கந்த சுவாமி கோவில், கொக்கட்டிச்சோலை - தான்தோன்றி ஈஸ்வரர் கோவில், நாச்சிமார் கோவிலடி - ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோவில், செட்டிபாளையம் - ஸ்ரீ காமாட்சி அம்மன் கோவில், பண்டாராய்யாவெளி - ஸ்ரீ நாக தம்பிரான் கோவில் என்பனவற்றின் வரலாறுகள் சம்பந்தமான ஆராய்ச்சி வேலைகள் முடிவடைந்துள்ளன.

திருக்குறான் மதரசாக்கள், முஸ்லிம் நலன் புரிச் சங்கங்கள் அஹதியா பாடசாலைகள் என்பனவற்றிற்கு மாதாந்த நிதி உதவி வழங்கப்பட்டது. முஸ்லிம் எழுத்தாளர்களினால் எழுதி வெளியிடப்பட்ட நூல்கள், அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், அவர்களிடமிருந்து விலைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டன. 1993, ஏப்பிறல் மாதம் முதலாம் திகதி நடைபெற்ற "மஸ்ஜித் - மதரசாக்கள் தின" த்திலன்று 42 பள்ளிவாசல்களுக்கு நிதி உதவிகள் விநியோகிக்கப்பட்டன. 1993 ல் புனித மக்கா நகருக்கு யாத்திரை மேற்கொண்டவர்களுக்கு சகலவித உதவிகளும் பூர்த்தி செய்யப்பட்டன. பல தரப்பட்ட துறைகளிலும் சிறந்து விளங்கிய முஸ்லிம் கலைஞர்களுக்கு, அவர்களது தொழிற் திறனை விருத்தி செய்யவென கலாசார விருதுகள் வழங்கப்பட்டன.



# வறுமை ஒழிப்பு

## சனசக்தித் திட்டம்

சமூகத்தில் கஷ்டநிலையில் உள்ள பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்யவென, மும்முனை நடவடிக்கைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் மேற்கொண்டிருந்தது. வறுமைத் தடுப்பு, வறுமை ஒழிப்பு, வறியவர்களுக்கான நிவாரணம் என்பன அவையாகும்.

பல தரப்பட்ட துறைகளினதும் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அபிவிருத்தி செய்வதற்கென அநேக கொள்கைத் திட்ட நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டன. இவற்றின் காரணமாக, அதிகரித்த வேலைவாய்ப்பும், மேலதிக வருமானமும் பெற்றுக் கொள்ளப்படும் என்று எதிர்பாாக்கப்படுகின்றது. வறியவர்கள் என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்படுவதை தவிர்க்க இவை பெரிதும் உதவும். வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் உதவி பெறுவோரின் தகைமைகள் கருத்திற்கெடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன. வறியவர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ் முதியவர்கள், இத்தகைய நிலையில் உள்ள ஏனையவர்கள் ஆகியோர் உதவியளிக்கப்படவிருக்கின்றனர்.

வறுமை ஒழிப்பு சம்பந்தமான முக்கிய திட்டம் என்று கருதப்படும் சனசக்தித் திட்டம் 1993 ஆம் ஆண்டில் நான்காவது வருடத்தை அடைந்தது 1989 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்ட இந்தத் திட்டத்தின்கீழ் முதல் இரண்டு சுற்றுக்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. முதலாவது சுற்று நடவடிக்கைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 28 உதவி அரசாங்க அதிபர்

பிரிவுகளில் 1,65,000 ஏழைக்குடும்பங்கள் உதவிகளைப் பெற்றுக் கொண்டன. இரண்டாவது சுற்றில் உதவி பெற்றவர்களின் எண்ணிக்கை 1,04,929 ஆகும். முதலாவது சுற்றில் 1,29,000 குடும்பங்களும் இரண்டாவது சுற்றில் 95,375 குடும்பங்களும் மூலதன உரிமைச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டன. இதன் அடிப்படையில், ஒவ்வொரு குடும்பத்தினரும் 25 ஆயிரம் ரூபா மூலதனத்தையும் அதற்குரிய வட்டியான மாதமொன்றுக்கு 250 ரூபாவையும் பெற்றுக் கொண்டனர். 1992 பெப்புருவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட மூன்றாவது சுற்று நடவடிக்கைகளில் 96,000 குடும்பத்தினர் சன சக்தித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். 1993 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப் பட்ட நான்காவது சுற்றின்போது உதவு பெற்றவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சம் குடும்பங்களாகும்.

வறிய மக்களுக்கு உதவியளிக்கவென ஆரம்பிக்கப்பட்ட உணவு முத்திரைத் திட்டம் நாட்டின் சகல மாவட்டங்களிலும் ஏறத்தாழ 13 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணங்களை வழங்கியுள்ளது.

இந்தக் குடும்பத்தினர், – 8 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு 50 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளையும், 8 தொடக்கம் 12 வயது வரையிலான சிறுவர்களுக்கு 40 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளையும் 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு 30 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளையும் மாதா மாதம் பெறுகின்றனர்.

இவற்றைத் தவிர மண்ணெண்ணெய் வாங்குவதற்கென 44 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒவ்வொரு வீட்டு உடமையாளரும் பெற்றுக் கொள்கின்றனர்.



# பிரதேச அபிவிருத்தியும் பன்முகப்படுத்தலும்

அரசாங்கத்தின் தற்போதைய நோக்கமான பிரதேச/கிராமிய அபிவிருத்தியும் பன்முகப்படுத்தலும் இரண்டு முக்கிய விடயங்களை வற்புறுத்துகின்றது. பின்தங்கிய பகுதிகளின் அபிவிருத்தி - வசதி குறைந்த மக்களுக்கான நலன், பொதுப் பங்களிப்பு, அடிப்படைத் தேவைகள், வருமான அதிகரிப்பு என்பன அவையாகும். பிரதேச அபிவிருத்தி - பன்முகப்படுத்தல் என்பதன் பிரகாரமான பொருளாதார - சமூக கொள்கைகள் சமீப காலத்தில், இந்த இரு நோக்கங்களுக்கிடையில் சமநிலை ஏற்படுத்தியுள்ளன.

தற்சமயம் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டம் மேலும் பல மாவட்டங்களை உள்ளடக்கும் விதத்திலும் மேலும் பெருமளவு பொருளாதார உதவிகளைப் பெறும் வகையிலும் விஸ்தரிக்கப்பட்டது. இத்தகைய திட்டம் பொலனறுவையில் மேற்கொள்ளப்படுவதற்கென ஐ. பொ. சமூகத்துடன் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம்-பொருளாதார ஒத்துழைப்புக்கான ஜேர்மன் நிலையம் என்பனவற்றின் உதவியுடன் வடமேல் மாகாண வரண்ட வலய அபிவிருத்தித் திட்டம் 1993 ல் ஆரம்பிக்கப்பட்டது. கம்பஹா ஒ. கி. அ. திட்டத்தின் 2 ஆம் கட்டத்திற்கென ஜப்பானிய உதவி பெற்றுக் கொள்ளப்படும். இந்த மாவட்டத்தில் மேலும் பல வீதிகள் - பாலங்கள் அமைக்கப்படுவதில் கவனம் செலுத்தப்படும். சென்ற வருடத்தில் தென் பிராந்திய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் அங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள், மற்றும் திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி முயற்சிகள் என்பனவற்றை

இது ஒன்றிணைக்கும். பதுளை மாவட்டத்தில் மனிதவள மற்றும் ஸ்தாபகரீதியான அபிவிருத்தியை விஸ்தரிக்கவென யூ. என். டி. பி. உடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது. கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிட்டு செயற்படுத்துவதில் சமுதாய பங்களிப்பை அபிவிருத்தி செய்ய யூ. என். டி. பி. உதவும்.

பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பலப்படுத்தவும், மூலவளம் சமமாக வழங்கப்படுவதை நிச்சயிக்கவுமென, ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும், பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 25 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு தொடர்பாகவும் தகவல் கொத்து (பிரதேச செயலகங்கள் சம்பந்தமான வழிகாட்டி) தயாரிக்கப்பட்டது. ஒரு பிரதேச செயலகத்திலுள்ள அதிகாரிகள், முகவர்கள், முக்கியமான அலுவலகங்கள் தொலைபேசி இலக்கங்கள், பிரதேசத்தின் படம் என்பன இதில் இடம்பெற்றுள்ளன. கௌரவ அமைச்சர்கள், மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி அதிகார சபைகளின் அங்கத்தவர்கள் அதிகாரிகள் ஆகியோருக்கு இது ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் பிரதேச அபிவிருத்தி கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. உள்ளூர் மட்ட திட்ட அதிகாரிகளுக்கு "பிராந்திய அபிவிருத்தி" தொடர்பாக டிப்ளோமா பயிற்சி நெறியை இது வழங்குகிறது. பிராந்திய கிராமிய அபிவிருத்தியில் ஆராய்ச்சிகளும், ஆலோசனைகளும் நிலையத்தினால் வழங்கப்பட்டன. மாகாண - பிரதேச மட்ட அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கவென கொள்கைத் திட்டமிடல், செயற்படுத்துகை அமைச்சு, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிலையம், பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிலையம் என்பனவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு மாவட்ட மட்டத்தில் திட்ட சக்தி வளத்தை பலப்படுத்தவென, பயிற்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன.

# மக்கள் மயப்படுத்தலும் பொது வசதி அபிவிருத்தியில் அரச/தனியார் பங்களிப்பும்

## மக்கள் மயப்படுத்தல்

அரச நிறுவனங்களை மக்கள் மயப்படுத்தும் திட்டம் அரைப்பங்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்த அரச நிறுவனங்களைத் திட்டமிட்டு சந்தைப்படுத்துவதற்கென அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளன. திறந்த சந்தையில் இந்த அரச நிறுவனங்களின் பங்குகள் பெறும் விலைகளிலிருந்து இதனை நாம் அறியலாம். றமடா ஹோட்டலை நிர்வகிக்கும் டிறான்ஸ் ஏசியா ஹோட்டல் நிறுவனத்தின் 76.9% 10 ரூபா பங்குகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் ஆகக்கூடிய விலையான 23 ரூபாவுக்கு விற்பனைக்கு விடப்பட்டன. இறுதியாக பங்கு ஒன்று ரூபா 29.25 க்கு விற்றதன் மூலம் 1,124 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது. லங்கா கனரீஸ் நிறுவனத்தின் 100 ரூபா பங்குகள், பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் 591 ரூபாவுக்கு விற்பனைக்கு விடப்பட்டன. இன்றுவரை 19 அரச நிறுவனங்கள், மக்கள் மயப்படுத்தப் பட்டுள்ளன. இந்த அரச நிறுவனங்களுக்கென பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் 7,749.22 மில்லியன் ரூபாவாகும்.



தனியார் மயப்படுத்தப்பட்ட பல அரச நிறுவனங்கள் தனியார் துறை முகாமைத்துவத்தின் கீழ் திறமையாக செயற்பட்டுள்ளன. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில், இந்த நிறுவனங்களின் பங்கு விலைகள் தீவிரமாக அதிகரித்திருப்பது இதனை நிரூபிக்கிறது. 16 ரூபாவாக விற்கப்பட்ட ஹுனாஸ் பால்ஸ் ஹோட்டல் பங்குகள் தற்சமயம் 37 ரூபா 25 சதமாக விற்கப்படுகின்றன. 1990 ஜூன் மாதத்தில் பங்கு ஒன்று 10 ரூபாவாக விற்கப்பட்ட பூகொட துணி ஆலைப்பங்குகள் தற்சமயம் 13 ரூபாவுக்கு வாங்கப்படுகின்றன. 1990 நவம்பர் மாதத்தில் 16 ரூபாவுக்கு விற்ற லங்கா ஒக்சீஜின் பங்கினது இன்றைய விலை 115 ரூபா.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் இந்த அரச நிறுவனங்களின் பங்குகளுக்குக் கிடைக்கும் பிரிமியம் விலைகள் - மக்கள் மயத்திட்டங்களில் முதலீட்டாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும், இந்த அரச நிறுவனங்கள் முதலீட்டாளர்களுக்கு இலாபகரமாக செயற்படச் செய்வதற்கென புதிய தனியார்துறை சொந்தக்காரர்கள் கொண்டுள்ள சக்தியையும் எடுத்துக்காட்டின.



4--

## மக்கள் மயப்படுத்துதலும் பொது வசதிகள் அபிவிருத்தியில் அரச/தனியார் பங்களிப்பை அபிவிருத்தி செய்தலும்

பொது வசதிகளை அபிவிருத்தி செய்வதில், அரசாங்க/ தனியார் பங்குதாரர்களாக அமைந்த செயற்றிட்டத்தை 1992 ஜூலை மாதத்தின் அமைச்சரவை அங்கீகரித்தது. கொள்கைத் திட்டமிடல் செயற்படுத்துகை அமைச்சின் ஒரு பகுதியாக, "பொது வசதிகள் அபிவிருத்தி - மூலதனச் செயலகம்" என்பது அமைக்கப்பட வேண்டுமென்றும் அமைச்சரவை ஏற்றுக் கொண்டது. இந்த நடவடிக்கைகளை, அபிவிருத்தி செய்து, இணைத்து, கண்காணிப்பது இந்தப் பிரிவின் கடமைகளாகும்.

யு. எஸ். எயிட் இந்தத் திட்டத்துக்கு தனியார் பொது வசதித் திட்ட அபிவிருத்தி மூலம் நிதியுதவியையும் தொழில்நுட்ப உதவியையும் வழங்க முன்வந்தது.

"அமைத்து - செயற்படுத்தி - சொந்தமாக்கல்" மற்றும் "வர்த்தக நிலையங்களை நடத்தி- உரிமை மாற்றுதல்" திட்டங்களுக்கான வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு கைநூலாக வெளியிடப்பட்டன. அமைச்சுக்கள், முகவர் நிறுவனங்கள் என்பனவற்றுக்கும் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கென வெளி விவகார அமைச்சுக்கும் இவை அனுப்பிவைக்கப்பட்டன.

திட்டங்கள் சம்பந்தமான தகவல்களைக் கொண்ட ஆவணங்களைத் தயாரிப்பதில் அமைச்சுக்களுடனும் முகவர் நிறுவனங்களுடனும் 1992 ஆம் ஆண்டில் கடைசி ஆறு மாத காலப்பகுதியில் பொது வசதிகள் அபிவிருத்தி மூலதனச் செயலகம் இணைந்து கொண்டது. திட்டத்தின் சாத்தியங்கள் பற்றிய ஆய்வுகள் கேள்விப் பத்திரங்கள் மூலதனமிடுவோரிடம் கலந்துரையாடல் என்பன மேற்கொள்ளப்பட்டன. காலித் துறைமுக அபிவிருத்தித் திட்டம், டீசல், நிலக்கரிச் சக்திவளத் திட்டங்கள், கொழும்பு - தெஹிவளை கடற்கரையோர வீதியமைப்புத் திட்டம், தென் மாகாண நீர் விநியோகத் திட்டம், கொழும்பு நகர கடின கழிவுப் பொருள் முகாமைத்துவத் திட்டம் என்பன இவையாகும்.

திட்டங்கள் சம்பந்தமாக 1993 ஆம் ஆண்டில் இடம்பெற்ற முன்னேற்றம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :

கீழ்க்காணும் திட்டங்கள் சம்பந்தமாக தற்சமயம் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படுகின்றன.

* 2 × 150 மெகாவொட் நிலக்கரியினால் இயங்கும் மின் உற்பத்தி நிலையம். (திருகோணமலை).
* 40 மெகாவொட் டீசல் மின் உற்பத்தி நிலையம் - சப்புகஸ்கந்தை.
* 0.7 மெகாவொட் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் - டிக்கோயா.

கீழ்க்காணும் திட்டங்களுக்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன :

* 9 சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள். (மொத்த சக்தி 49 மெ. வொ).
* காலித் துறைமுக அபிவிருத்தி.


கீழ்க்காணும் திட்டங்கள் சம்பந்தமாக சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்ளும்படி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

* 2 × 15 மெ. வா. சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் பெலிஹுல் ஓயா.
* கொழும்பு கடற்கரையோரக் காணி மீட்டெடுப்பும் கடற்கரையோர வீதித் திட்டமும்.
* 10.5 மெ. வொ. சிறிய நீர் உற்பத்தி நிலையத் திட்டம் - பூண்டுலோயா, தினி ஓயா, பொல்தும்பே ஓயா, ரத்கங்க.

கீழ்க்காணும் திட்டங்கள் சம்பந்தமாக சாத்திய வள ஆய்வுகள் பூர்த்தி செய்யப் பட்டுள்ளன. :

* கடின கழிவுப் பொருள் முகாமைத்துவத் திட்டம் - கொழும்பு நகரப் பகுதி. வெல்லம்பிட்டியில், முன்னோடி நிலையம் விரைவில் அமைக்கப்படும்.
* தென்மாகாண நீர் விநியோக - மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டம்.

கொழும்பு - மாத்தறை உள்நாட்டு கடுகதி வீதித் திட்டம் சம்பந்தமாகவும் பூர்வாங்க சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய ஆய்வுகளுக்கென வேறும் பல பொது வசதித் திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன.



# சுற்றாடல்

ஒவ்வொரு அபிவிருத்தித்திட்டத்திற்கும், பொருத்தாமான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு சட்டங்களை உள்ளடக்கும் விதத்தில் தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு திருத்தங்களை பாராளுமன்றம் அங்கீகரித்துள்ளது. மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நிலையங்களாக செயற்படவென 15 "திட்ட அங்கீகார முகவர் நிலையங்களுக்கு" விசேட அதிகாரங்கள் 1993, ஜூன் 24ம் திகதிய 772/22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வழங்கப்பட்டுள்ளன.


ஏற்கனவே செயற்படும் கைத்தொழில்கள், அசுத்த கட்டுப்பாட்டு உபகரணங்களில் மூலதனமிட்டால் அவற்றிற்கான வரிச் சலுகைகள், தீர்வை விலக்குகள் என்பன கொண்ட ஊக்கங்களை அளிப்பது சம்பந்தமான பிரேரணையையும் அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

சுற்றாடற் கல்வி — விழிப்புணர்ச்சியை உருவாக்கும் திட்டத்தின் கீழ் "சுற்றாடல் நாட்டிய நாடகம்" ஒன்று மேடையேற்றப்பட்டது. நோறாட் உதவியுடன் மேடையேற்றப்பட்ட இதில், பலதரப்பட்ட சுற்றாடல் அம்சங்களும் பொருளாதார விடயங்களும் இடம்பெற்றிருந்தன.

சுற்றாடல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான யூ. எஸ். எயிட் தொழில்நுட்ப உதவியுடன் பல வேலை முகாம்களும் பயிற்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய ரீதியில் தற்போது மேற்கொள்ளப்படும் சுற்றாடல் நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்கள் செயலகம், உள்ளூராட்சி சபைகள் எனபனவற்றிற்கு பன்முகப்படுத்தும் விதத்தில் தற்சமயம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தற்சமயம் மேற்கொள்ளப்படும் பல சுற்றாடல் நடவடிக்கைகள் உள்ளூராட்சி அதிகாரிகளிடம் 1994. 01. 01. ஆம் திகதியில் இருந்து ஒப்படைக்கப்படவிருக்கின்றன. சுற்றாடலை அசுத்தமாக்கும் கைத்தொழில்கள் சம்பந்தமாக பன்முக திட்டத்தின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களை உள்ளூராட்சி சபைகள் வழங்க இருக்கின்றன. பன்முகப் படுத்தலின் தாக்கத்தையிட்டு மதிப்பீடு செய்யவென வழிகாட்டிகளும், கை நூல்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

# உற்பத்தியும் வர்த்தகமும்




## விவசாயம்

இலங்கைக்கு விதைகளை இறக்குமதி செய்வதில் தனியார் துறையினரது ஈடுபாட்டை பலப்படுத்தும் விதத்தில், விதை உருளைக் கிழங்கின் இறக்குமதியை தாராளமயப்படுத்தவென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் மூலம் விதை இறக்குமதியில் தனியார் துறையின் பங்களிப்பு அதிகரிக்கப்படுமென்றும் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கின் விலையைக் குறைக்க முடியுமென்றும் எதிர் பார்க்கப்படுகின்றது. இதனடிப்படையில், காலக்கிரமத்தில், பாவனைக்கான உருளைக்கிழங்கின் விலையும் வீழ்ச்சியடையும்.


நெல் உற்பத்தி

1986 - 1993




| | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Maha | 80.8 | 66.7 | 73.1 | 64.3 | 79 | 75 | 77.8 | 82 |
| Yala | 43.1 | 35.2 | 45.6 | 34.5 | 42.7 | 40.1 | 34 | 45 |

அரிசி, மிளகாய், வெங்காயம், உழுந்து என்பனவற்றின் இறக்குமதியைப் படிப்படியாகக் குறைத்து, 1994 ஆம் ஆண்டளவில் இந்த இறக்குமதியை முற்றாக நிறுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். விவசாயிகளுக்கென சிறிய கடன் வசதித் திட்டமொன்றையும் அது செயற்படுத்தியுள்ளது. கடன் தொகை மீளச் செலுத்தப்படுத்துவதன் அடிப்படையில், இது ஒரு வெற்றிகரமான திட்டமென தெரிய வந்துள்ளது.



## கடற்றொழில்


கடந்த சில வருடங்களாக மொத்த மீன் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய அதிகரித்த உற்பத்திக்கு கடந்த காலத்தில் நடைமுறைக்கிடப்பட்ட முக்கிய கொள்கைகளே காரணங்களாகும்.



| | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|
| உற்பத்தி இலக்கு (தொன்) | 1,79, 664 | 1,90, 070 | 2,00, 714 | |
| பெறுகை (தொன்) | 1,77, 063 | 1,98, 063 | 2,06, 108 | 1,26, 100 ஆகஸ்ட் வரை |

தனியார் துறையின் பிரவேசத்துக்கு வழிவகுக்கும் விதத்தில் அரசாங்கத் துறையின் தலையீடுகளைக் குறைத்து விரிவான மறுமலர்ச்சித் திட்டமொன்றை கடற்றொழிற்றுறை தயாரித்துள்ளது.

மீன்பிடித் தொழிலின் அபிவிருத்திக்கென, ஆசிய அபிவிருத்தி வங்கியின் 50 மில்லியன் டொலர் நிதியுதவி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பல நாட்கள் தங்கி மீன் பிடிக்கும் படகுகள், தற்போதைய மீன்பிடித் துறைமுகங்களின் புனரமைப்புக்கென சாத்தியவள அறிக்கை தயாரித்தல், படகு நிறுத்தும் இடங்கள், புதிய துறைமுகம் ஒன்றை அமைத்தல், மூலவள மதிப்பீடு, ஊழியர் பயிற்சி, கடற்றொழில் கூட்டுறவு அமைப்பைப் பலப்படுத்தல் என்பன இதன் மூலம் மேற்கொள்ளப்படும்.



## கால்நடை

மாகாண சபைகளுடன் இணைந்து விலங்குச் சுகாதாரம், ஆராய்ச்சி, இனவிருத்தி போன்ற துறைகளில் கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைகளை விலங்குப்பாதுகாப்பு சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. இருந்த போதிலும், அரசாங்கப் பண்ணைகளில் இருந்து நல்ல இனவிருத்திப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதையும், விநியோகத்தையும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை மேற்கொண்டு வருகிறது. சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் கால்நடைப்பண்ணைகளில் கணிசமான அபிவிருத்தி அவதானிக்கப்பட்டுள்ளது.

வழமையாக மேற்கொள்ளப்படும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் மிருக உற்பத்தி - சுகாதாரத் திணைக்களம் 806, 876 கால்நடைகளுக்கும் எருமைகளுக்கும் தடுப்பூசி ஏற்றியுள்ளது. 87,55, 598 கோழிகளுக்கும் 25, 012 பன்றிகளுக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

இந்தத் திட்டத்தின் கீழ் 7,227 வெளிக்கள நாட்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப் பட்டன. கால்நடை முகாமைத்துவம் - உற்பத்தி என்பனவற்றின் பலதரப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக 62,449 விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

1991, ஜூலை மாதத்தில் அறிமுகம் செய்யப்பட்ட விசேட செயற்கை முறை சினைப்படுத்தல் திட்டம் கணிசமான அபிவிருத்தி கண்டுள்ளது. 1993, செப்டம்பர் மாதம் வரை 53,891 சினைப்படுத்தல்கள் இடம் பெற்றன. இந்த வருடம் முடிவடையும் போது 80,000 சினைப்படுத்தல்களை மேற்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

கால்நடைப்பண்ணை விவசாயிகளுக்கு செயற்கைச் சினைப்படுத்தல் முறையை அறிமுகம் செய்ய முடியாத வரண்ட வலைய பிரதேசங்களில் நல்ல இன காளைகளை உபயோகித்து 6,098 இயற்கைச் சினைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஊவா, வடமத்திய, தென் மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்ட ஒருமுக சினைப் படுத்தல் திட்டம் வெற்றிகரமாக தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. 1993 செப்டம்பர் மாதம் வரை இவ்வாறு சினைப்படுத்தப்பட்ட பசுக்களின் எண்ணிக்கை 1,474 ஆகும்.

வெளிக்கள மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கன்னிப்பசுக்கன்று வளர்க்கும் திட்டம் இந்தக் காலப்பகுதியில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது. 1993, செப்டம்பர் வரை 43 பண்ணைகளில் 1883 விலங்குகள் சம்பந்தமாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நாடு முழுவதிலும் 1993, ஆகஸ்ட் மாதமளவில் 574,21 411, லீற்றர் பால் சேகரிக்கப் பட்டது. நாளாந்தம் சேகரிக்கபட்ட அளவு 2,36,302 லீற்றர்கள் ஆகும். சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது இது, 5.2% அதிகரிப்பைக் காட்டுகின்றது. இந்த வருடத்திலிருந்து லீற்றர் பாலுக்கான உற்பத்தியாளர் விலையை 75 சதம் அதிகரித்ததே இதற்கான காரணம் என்று கூறலாம்.

சமூகத்தில் வறிய நிலையில் உள்ளவர்கள் மத்தியிலும் குறைந்த செலவிலான குளிரூட்டப்பட்ட, ஆடை நீக்கப்பட்ட பாலின் உற்பத்தி - பாவனை என்பனவற்றை பிரபல்யப்படுத்தவும், உள்ளூர் - வெளிநாட்டு இனவிருத்திப் பண்ணைகளுக்கிடையில் நிலவும் ஏற்றத்தாழ்வை நீக்கவுமென, உள்ளூர் முதலீட்டாளர்களின் குறிப்பிட்ட சிலயந்திர சாதனங்களின் இறக்குமதி மீதான வரிக்கு 1993 மார்ச் மாதத்தில் நிதியமைச்சர் விலக்களித்துள்ளார். 3 வருடங்களுக்கு இது செல்லுபடியாகும்.

கோழி வளர்ப்புத்துறை சம்பந்தமாகவும் கணிசமான முன்னேற்றம் காணப் பட்டிருக்கிறது. 1993, செப்டம்பர் வரை வளர்க்கவென வழங்கப்பட்ட கோழிக்குஞ்சுகள் 16 மில்லியன் ஆகும். முட்டையிடும் கோழிகள் 3.5 மில்லியன்.



# பெருந்தோட்டங்கள்

முந்திய வருடத்துடன் ஒப்பிடும் போது இலங்கையின் தேயிலை உற்பத்தி 37 மில்லியன் கிலோகிராமினால் அதிகரித்துள்ளது. இருந்தபோதிலும், 1991 ஆம் ஆண்டின் உச்சக்கட்ட உற்பத்தியிலும் பார்க்க, இது 13 மில்லியன் கிலோகிராம் குறைவானதாகும்.

உற்பத்தி அதிகரிக்காத போதிலும் தொழிலாளர்களுக்கான சம்பளங்கள் ஏனைய நன்மைகள் என்பன அதிகரிக்கப்பட்டதனால் உற்பத்தியாளருக்கான இலாபம் குறைந்துள்ளது. அரச துறைக்கு வெளியே செயல்படும் சிறிய தோட்டச் சொந்தக்காரர்கள் நம்பகமான இலாபத்தைப் பெறுகின்றனர்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், தேயிலை ஏற்றுமதியில் இலங்கை தொடர்ந்தும் முன்னணியில் திகழ்கின்றது. தேயிலை உற்பத்தியிலும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளுக்கான சந்தையில் எமது நாடு பற்றி நம்பகமான அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது. தேயிலை, மொத்தமாக ஏற்றுமதி செய்வதற்கு பதிலாக, பொதி செய்யப்பட்ட தேயிலை தற்சமயம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இயற்கை இறப்பர் உற்பத்தியும் சென்ற வருட மட்டத்திலேயே இருந்தது. வருடத்தின் முதல் சில மாதங்களில் ஏல விற்பனை விலைகள் ஒரே நிலையில் இருந்தன. இருந்த போதிலும், உற்பத்திச் செலவிலும் பார்க்க இறப்பரின் விற்பனை விலை தொடர்ந்தும் அதிகரித்த நிலையில் உள்ளது.

துரித புனர்நடுகை திட்டத்தின காரணமாக கடந்த சில வருடங்களில் இறப்பர் உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளது. உலக வங்கியின் உதவியுடன் சிறிய இறப்பர் புனர்நிர்மான திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வருடத் தெங்கு உற்பத்தி 2,000 மில்லியன் தேங்காய்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. முந்திய வருடத்திலும் பார்க்க இந்தத் தொகை 18% குறைவானதாகும். 1992 ஆம் ஆண்டில் நிலவிய வரட்சியே இதற்கான காரணமாகும். எனவே, இந்த வருட உற்பத்தி எமது தேவையை பூர்த்தி செய்யமாட்டாது.

ஏற்றுமதி சம்பந்தப்பட்ட வகையிலும் தெங்கு உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதியில் தீவிர வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் முதலாவது தவணையில் தேங்காய் உற்பத்திப் பொருட்களிலும், தேங்காய் விலையிலும் தீவிர அதிகரிப்பு காணப்பட்டது. அதிக எண்ணிக்கையில் தேங்காய் கிடைப்பதினாலும் உணவு எண்ணெய் வகைகளின் இறக்குமதிக் தீர்வை குறைந்ததனாலும் மார்ச் மாதத்திலிருந்து விலைகள் வீழ்ச்சி அடைந்தன. இந்த வருட முதல் 6 மாத காலத்தில் விலைச் சுட்டி காட்டியதற்கு அமைய சென்ற வருட இதே காலப்பகுதிலும் பார்க்க இந்த வருட உற்பத்தியில் அதிகரிப்பு காணப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்களை 23 தனியார் முகாமைத்துவ கம்பனிகள் நிர்வகித்து வருகின்றன. தத்தமது தோட்டங்களின் வனப்பிராந்தியத்தை அபிவிருத்தி செய்வதிலும் சில தோட்டங்களில், தோட்ட மண்ணை அபிவிருத்தி செய்வதிலும் அவை முன்னேற்றம் கண்டுள்ளன. தேயிலை பதனிடுவதற்கும், தோட்டத் தொழிலாளரின் வீட்டுப்பாவனைக்குமென அதிகரித்த அளவில் கோரப்படும் விறகுத் தேவையையும் இது பூர்த்தி செய்யும்.

# கைத்தொழில்

புதிய கைத்தொழில் அபிவிருத்தி திட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடமுறைக்கிடப் பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட பொது வசதிகளை அபிவிருத்தி செய்யவென வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பிரதேச கைத்தொழில் சேவை நிலையங்கள் அமைக்கப்பட்டன.

கொழும்பு மாவட்டத்துக்கு வெளியேயும் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கமைய தேர்ந்தெடுக்கபட்ட பிரதேசங்களில் பொது வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கீழ்க்காணும் இடங்களில் பாரிய கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்படும்.

(1) சப்புகஸ்கந்த :- விஸ்தீரணம் 125 ஏக்கர். மூலதனம் 300 மில்லியன் ரூபா. 65 கைத்தொழில் பிரிவுகள்.

(2) அவிசாவலை :- விஸ்தீரணம் 165 ஏக்கர். 23.9 மில்லியன் டொலர் மதிப்புடனான வெளிநாட்டு பங்களிப்புடன்.



கைத்தொழிலை சர்வதேச தரத்துக்கு இணையாக அபிவிருத்தி செய்யவும், கைத்தொழில் தொழில் நுட்பத்தை விரிவாக்கவுமென, "தனியார் துறைக்கான தொழில்நுட்ப பூர்வாங்கத் திட்டத்தின்" மூலம் அடிப்படை உதவிகள் தனியார் துறைக்கு வழங்கப் பட்டன. 1993 ஜூலை வரை 715 கைத்தொழிலாளர்களுக்கு 4.8 மில்லியன் டொலர் உதவிகள் இந்தத் திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டன.

அரச துறை நிறுவனங்களை புனரமைக்கும் திட்டத்தில் அரச உற்பத்தி ஸ்தாபன கடன் வசதி சீராக்கல் அமைப்பு கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது.

சுரங்க மற்றும் கனிப் பொருள் துறைகளில் 6 நிறுவனங்கள் ஆரம்பிக்கப் பட்டன. இவை அல்லாத துறைகளில் தொடங்கப்பட்ட ஸ்தாபனங்களின் எண்ணிக்கை 8 ஆகும்.

தனியார் மயப்படுத்தும் திட்டத்தின் கீழ் 32 நிறுவனங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டன.

சிறிய அளவிலான கைத்தொழில்களின் அபிவிருத்தி பற்றி அரசாங்கம் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகிறது. உலக வங்கி உதவி பெற்ற இந்தத் திட்டத்தின் கீழ் 1993 ஆகஸ்ட் மாதம் வரை - 4717 திட்டங்களுக்கு 1216.1 மில்லியன் ரூபா கடன்வசதிகள் வழங்கப்பட்டன.

மாகாண கைத்தொழில் மய திட்டத்தின் கீழ் 1993 இல் மிகிந்தலை, கரந்தெனிய ஆகிய இடங்களில் சிறு கைத்தொழில் பேட்டைகள் திறந்து வைக்கபட்டன. வெளிநாட்டு உதவியுடன் நகர்ப்புறப்பகுதிகளில் மேலும் 12 சிறு கைத்தொழிற் பேட்டைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும். 207 புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படவென கைத்தொழில் அபிவிருத்திச் சபை உதவி வழங்கியுள்ளது. சிறிய அளவிலான சுய உதவிப்பிரிவுகளும் இந்த உதவியுடன் அமைக்கப்பட்டன.

சிறிய அளவிலான உற்பத்திகளுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் றுகுணு, வயம்பா பகுதிகளில் 2 கைத்தொழிற் கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

சிறு கைத்தொழிற் திணைக்களத்தின் வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தும் கைப்பணி அபிவிருத்திச் சபையினால் பொறுப்பேற்கப்படுகின்றன. பன்முக கொள்வனவு முறை அறிமுகம் செய்யப்பட்டு 16 பிராந்திய நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

உள்ளூர் கைப்பணியாளர்களை ஊக்குவிக்கும் விதத்தில் 2 வது தடவையாக 1993 இலும் சனாதிபதி விருதுகள் வழங்கப்பட்டன.

# புடவை, தைக்கப்பட்ட ஆடைகள்




கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக் கென தேசிய கைத்தறி அபிவிருத்தித் திட்டம் நடைமுறைக்கிடப்படுகிறது.

இந்த வருடத்தின் முதல் 9 மாத காலத்தில் 43 கைத்தறிக் கிராமங்களை ஆரம்பித்ததன் மூலம் கைத்தறிக் கிராமத் திட்டம் தொடர்ந்து மேற் கொள்ளப்படுகிறது. தற்சமயமுள்ள கைத்தறிக் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை 500 ஆகும்.

கைத்தறித் துறையில் தொழில் நுட்பத் தரத்தில் உள்ளவர்களுக்கும், முகாமைத்துவத் தரத்தில் இருப்பவர்க ளுக்கும் புடவைத் திணைக்களம் உள்ளக பயிற்சியை அளித்துள்ளது. பட்டு மற்றும் பருத்தி நெசவுத் தொழிலில் ஆலோசனை வழங்கவென இந்தியாவிலிருந்து 3 பிரபல நெசவாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். 162 நெசவாளர்களுக்கென விசேட நெசவுப்பயிற்சி, திணைக்களத்தினால் வழங்கப்பட்டது.

சனசக்தி உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த வேலை வசதியற்ற இளைஞர் யுவதிகட்கு கிராமப்பகுதிகளில் வேலை வாய்ப்பை வழங்குவதற்கு திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நெசவாலையிலும் கிராமப்பகுதியைச் சேர்ந்த 500 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கி ஏற்றுமதிக்கென ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைகள் 200 ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம், தொழிற்சாலைகள் அமைந்துள்ள பிரதேசங்கள் அபிவிருத்தி அடைவது மாத்திரமல்லாமல் ஏனைய கைத்தொழில்களும் அங்கு ஆரம்பிக்கப்படுகின்றன. இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தங்களை செய்து கொண்டுள்ள நிறுவனங்கள், உற்பத்தியை ஆரம்பித்துள்ளன.

சகல ஏற்றுமதிக் கோட்டாக்களினதும் ஒதுக்கீடு விநியோகம் என்பனவற்றை நிர்வகித்து நடத்தவென "துணிவகைகள் கோட்டா அனுமதிச் சபை" அமைக்கப் பட்டுள்ளது. ஆடைக் கைத்தொழில் விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படும் மாகாணத் தொழிற்சாலைகள், விஸ்தரிப்பு மற்றும் புதிய பிரிவுகள் என்பனவும் இந்த கோட்டா முறைக்கு உட்பட்டிருக்கும். மிகவும் கஷ்டப்பிரதேசங்களுக்கு 50, 000 டசின்கள், கஷ்டப்பிரதேசங்களுக்கு 25,000 டசின்கள், கஷ்டப்பிரதேசமல்லாதவற்றிற்கு 10,000 டசின்கள் என்ற அடிப்படையில் விநியோகம் இடம்பெற்றுள்ளது.



## வர்த்தகம்

***1992 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மொத்த ஏற்றுமதியின் பெறுமதி 107.52 மில்லியன் ரூபா. இந்த வருடம் சனவரி – யூன் மாதம்வரையிலான காலத்தின் ஏற்றுமதிப் பெறுமதி 61.9 மில்லியன் ரூபாவாகும். சென்ற வருடத்துடன் ஒப்பிடும்போது, ஏற்றுமதி அதிகரிப்பின் விகிதம் 31.4 %.***

ஏற்றுமதித் துறையில் தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி, தொடர்ந்தும் முன்னணியில் இருந்து வந்துள்ளது. முந்திய வருடத்திலும் பார்க்க 30.5 % வளர்ச்சி விகிதம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஏற்றுமதி செய்யப்பட்ட ஆடைகளின் பெறுமதி 49.176 மில்லியன் ரூபா.

ஏற்றுமதிப் பொருட்களை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அறிமுகம் செய்யும் விதத்தில், வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலும், வர்த்தக நிலையங்களிலும், ஏற்றுமதி அபிவிருத்தி காட்சிப் பொருள் சாளரங்களை அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தின் (1990-1994) செயற்பாடு, உப துறைகளில் நடவடிக்கைத் திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.


உலக வர்த்தக நிலையத்தில் 40 ஏற்றுமதி நிறுவனங்கள், விற்பனைக் கூடங்களை அமைத்துள்ளன. இவை உள்ளக வியாபாரத்தை மேற்கொண்டது மட்டுமல்லாமல் ஏற்றுமதிக்கென வெளிநாட்டுக் கொள்வனவுக் கட்டளைகளையும் பெற்றுள்ளன.

ஏற்றுமதியை அதிகரிப்புக்கு ஊக்கமளிக்கவென ஏற்றுமதியாளர்களுக்கு குறைந்த வட்டியில் வெளிநாட்டு நாணயக் கடன்களை அரசாங்கம் அமைத்தது. ஏற்றுமதிக்கென, இறக்குமதி செய்யப்பட்ட உட்பாய்ச்சலை தீர்வையற்ற விதத்தில் பெற்றுக் கொள்ளும் திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டது.

ஏற்றுமதி வர்த்தகத்துக்கு ஊக்கமளிக்கும் வகையில், உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் வர்த்தக கண்காட்சிகள் பல ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்டன. கைத்தறி ஆடைகளை சுற்றுலாப் பிரயாணிகளுக்கு அறிமுகம் செய்வதிலும், அவற்றை ஏற்றுமதி செய்வதிலும் தேசிய கைத்தறி நிலையம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டும்.

பாவனையாளர்களுக்கு தரத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்தில், பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் எஸ். எல். எஸ். அடையாளம் பெற்றுக் கொள்ளவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்களின் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளவென ஆரம்பிக்கப்பட்ட பாவனையாளர் நிவாரணப்பிரிவு, பொதுமக்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.



# இலங்கை முதலீட்டுச் சபை

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்திற்கு 1992, நவெம்பர் 3 ஆந் திகதி திருத்தம் கொண்டுவந்ததன் மூலம் நாட்டின் மூலதன நடவடிக்கைகளுக்கு பூரண அதிகாரம் கொண்ட நிறுவனமாக இலங்கை முதலீட்டுச் சபை வந்துள்ளது.

இந்தத் திருத்தத்தின் மூலம் அனுமதிபெற்ற சகல நிறுவனங்களும் இ. மு. சபையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் நாட்டின் எந்தப் பகுதியிலும் அமைக்கப்பட முடியும். ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட உள்ளூர் மூலதனங்களையும் உள்ளடக்கும் விதத்தில், அதன் எல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபையினால் அறிமுகம் செய்யப்பட்ட "ஒரே இடத்தில் நடவடிக்கை" என்பதன் மூலம் பூர்வாங்க சாத்திய வள ஆய்விலிருந்து நிறுவனத்தை அமைக்கும் வரையிலான ஒவ்வொரு கட்டத்திலும், உதவிகளும், ஆலோசனைகளும் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன.

ஏற்றுமதி வருடம் பிரகடனம் செய்யப்பட்டதோடு இணைந்ததாக 1992, நவெம்பர் மாதத்தில் இதுவரை இடம்பெறாததும், முதலாவதுமான எக்ஸ்போ - 92 சர்வதேச

கண்காட்சி நடைபெற்றது. வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் அதற்கு விஜயம் செய்தார்கள். 46 நாடுகளைச் சேர்ந்த பொருட் கொள்வனவாளர்கள் மூலம் 100 மில்லியன் டொலர்களுக்கான கொள்வனவுக் கட்டளைகள் கிடைத்தன.

உலக ஏற்றுமதிப்பொருள் பதனிடும் வலய அதிகாரசபை மகாநாட்டை நடத்துவதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது தென் கிழக்காசியநாடு என்ற வகையிலும் இலங்கை பெருமையடையலாம். 1992, நவெம்பர் மாதத்தில் கொழும்பில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் - 23 நாடுகளைச் சேர்ந்த 100 பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர்.

உத்தேச வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான ஊக்கங்கள், சலுகைகளில், ஒரு பகுதியாக அறிமுகம் செய்யப்பட்ட "முதலீட்டாளர்களுக்கான தங்குமிட திட்டம்" இ. மு. சபையினால் நிர்வகிக்கப்படுகிறது.

200 ஆடைத் தொழிற்சாலைகள் திட்டத்தையும் இ. மு. சபை தொடர்ந்தும் ஒன்றிணைத்து நடைமுறைக்கிட்டு வருகிறது. இவை அனைத்தும் கூட்டு முதலீடுகள் அல்லது முற்றிலும் உள்நாட்டு முதலீடுகள் ஆகும். இந்தத் திட்டத்தின் கீழ் 3 விதமான ஆலைகள் நிர்மாணிக்கப்பட்டன.

1. விஸ்தரிப்புப் பிரிவுகள்.
2. கொத்தணிப் பிரிவுகள்.
3. புதிய தொழிற்சாலைகள் என்பன இவை.


ஒவ்வொன்றிலும் 500 க்கு குறையாத தொழிலாளர்கள் தொழில் வசதி பெற்றனர்.

1993, யூலை அளவில், இ. மு. சபையின் 251 திட்டங்கள், வர்த்தக உற்பத்தியை ஆரம்பித்திருந்தன. கட்டுநாயக்க ஏற்றுமதி அபிவிருத்தி வலயத்தில் 84 உம், பியகமவில் 40 உம், கொக்கலயில் 10 உம் ஆக இவை அமைந்திருந்தன. இந்த வலயங்களுக்கு வெளியே அமைந்துள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 117 ஆகும்.

# பொருளாதார வசதிகள்


## போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்

கொழும்பு கோட்டையிலிருந்து ஹோமாகம வரை அகலமான தண்டவாளத்தின் மூலம் பிரயாணிகள் புகையிரத சேவை பலப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டைக்கும், நீர்கொழும்புக்குமிடையில் புத்தளம் பாதையில் மூன்று மேலதிக புகையிரதங்கள் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன.



மாத்தறைக்கும் கதிர்காமத்துக்குமிடையிலான விஸ்தரிப்பு 1991 மார்கழியில் ஆரம்பிக்கப் பட்டது. இவ்வேலை முன்னேற்றம் கண்டுள்ளது. நில அளவை, சுவீகரிப்பு, இடம் பெயர்ந்த குடியிருப்பாளரை மீளக் குடியேற்றல் ஆகியன வெவ்வேறு கட்டங்களில் முன்னேற்றத்திலுள்ளன. 1993 இல் மட்டக் களப்பு பொத்துவில் சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அனுராதபுரம் - மிகிந்தலை விஸ்தரிப்பும் குறிப்பிட்ட காலத்தில், ஒரு வருடத்துள் பூர்த்தியாக்கப்பட்டது. 1993 ஜூனில் அது உபயோகத்துக்கு வந்தது.



கொழும்பு கோட்டையிலிருந்து ஹோமகமவுக்கு பாதையை அகலமாக்கும் பணி பூர்த்தி அடைந்துள்ளது. அதிக எண்ணிக்கையான பிரயாணிகள் இதனை உபயோகிக்கின்றனர். ஹோமகமவுக்கும், பாதுக்கவுக்கும் இடையிலான பாதை வேலைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

புகையிரத பாலங்களின் புனரமைப்பின் ஆரம்ப கட்ட அறிக்கைகள் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் ஆலோசகர்களினால் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. விரைவில் இந்த வேலைகள் ஆரம்பமாகும். 60 எண்ணைத் தாங்கிகளுக்கான ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. 295 பிரயாணிகள் பெட்டிகள் ஏற்கனவே பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. மிகுதி 22 பெட்டிகள் இவ்வருடத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைப் புகையிரத சேவையை அரச திணைக்களத்திலிருந்து, அதிகார சபைக்கு மாற்றும் பணி இவ்வருடத்தில் இடம்பெறும். இது சம்பந்தமான சட்டவாக்கங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. உலக வங்கி செயற்திட்டம் 3 இன் கீழ், 420 கி. மீ. நெடுஞ்சாலைகளும், 20 பாலங்களும் நாட்டின் தெற்கு, வடக்கு, மேற்குப் பகுதிகளில் புனரமைப்பில் உள்ளன.

நெடுஞ்சாலைக்கான இரண்டு ஒப்பந்தங்களும், பாலங்களுக்கான ஒரு ஒப்பந்தமும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. வேலைகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. முதற்தடவையாக, வீதி அமைப்பிற்கான பொருட்கள், வடிவமைப்பு, நிர்மாண தராதரம், உள்ளூர் வீதி நிர்மாணத் தொழில், வீதி பாவிப்போர் கட்டணங்கள், தொடர்பான 3 பிரதான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இறுதி 2 ஆய்வுகள் பூர்த்தியாக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன.

தீவிரவாத நடவடிக்கை காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்திட்டம் 1 பாதிக்கப்பட்டது. மாத்தளை - தம்புள்ள - திருகோணமலை வீதி (ஹபரன வரை) புனரமைப்பு வேலை பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. சமரசப் பேச்சுவார்த்தையின் பின், அம்பேபுஸ - தம்புள்ள வீதி 80 கி. மீ. ஆரம்பிக்கப்பட்டு அதே வருடத்தில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. ஆ. அ. வங்கி செயற்திட்டம் 2 இன் கீழ் இரண்டு ஒப்பந்தங்கள் 146 கி. மீ. வீதிகளைப் புனரமைப்பதற்கு வழங்கப்பட்டன. வேலை முன்னேற்ற நிலையிலுள்ளது. ஆ. அ. வங்கியின் 3 வது திட்டத்திற்கான சாத்திய ஆய்வு, உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல் உட்பட ஆதார பராமரிப்புக்கான நிறுவன அபிவிருத்தித்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஆ. அ. வங்கியின் 3 ஆம் திட்டத்தின் கீழ் மத்திய - வடமேல் மாகாணங்களில் 250 கி. மீ. நீளமான வீதிப் புனரமைப்புக்கான பொறியியல், வடிவமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

விக்டோரியா பால 2 ஆம் கட்ட நிர்மாண வேலைகளுக்கு ஜப்பானிய கடல் கடந்த நாடுகளின் நிதி உதவி நிலையம் நிதி வழங்கும்.


கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதிக்கான பொறியியல், வடிவமைப்பு வேலைகளையும் சாத்திய வள அறிக்கைகளையும் உயர் நிலைக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. காணி சுவீகரிப்பும், மீளக்குடியமர்த்தலும் விரைவில் ஆரம்பிக்கப்படும். 1.2 மில்லியன் ரூபா பெறுமதியான வீதி பராமரிப்பு இயந்திர சாதனங்கள் இந்த வருடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றன.

# மின்சக்தி - எரிபொருள்

2000 ஆம் ஆண்டளவில் சகல கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்குவதென்பது அரசாங்கத்தின் முக்கிய இலட்சியங்களில் ஒன்றாகும். இதனை அடையவென, ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன், கிராமிய மின் விநியோகத்திட்ட 2 ஆம் கட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 1993 ஜூன் மாதம் வரை செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் 1064 ஆகும். ஆசிய அபிவிருத்தி வங்கி, ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம் என்பனவற்றின் உதவியோடு செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை, 10,500 க்கும் அதிகமாகும்.


120 மெகவாட் சக்தி கொண்ட சமனலவேவ நீர்மின்சாரத்திட்டம் 1992 நவெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை மின்சாரசபையினால் அறிமுகம் செய்யப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் பல பாவனையாளர்கள் கடனைப் பெற்றுள்ளனர். 1987 ல் இருந்து 1993 ஜூன் மாதம் வரை 210,049 வீட்டுப்பாவனையாளர்களும், கைத்தொழிலாளர்களும் கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர். 1992 இறுதி வரை இ. மி. சபையினால் வைத்திருக்கப்பட்ட பாவனையாளர் கணக்குகள் - 1,075,791 ஆகும்.

1993 ஜனவரிக்கும் - செத்தெம்பர் மாதத்துக்கு மிடையில் 126,362 புதிய கணக்குகள் திறக்கப்பட்டன. 8000 மில்லியன் ரூபா மொத்த மூலதனத்துடன் 6 மின் உற்பத்தி + விநியோகத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு, உலக வங்கி, ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ் ஆகியன உதவி வருகின்றன.



# தபால் - தொலைத் தொடர்புகள்

நாட்டு மக்களுக்கு தபால் - தொலைத்தொடர்புகள் சம்பந்தமாக 1993 இல் வழங்கப்பட்ட சேவைகள் முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுகின்றன.



தபால் அலுவலகங்கள், உப தபால் அலுவலகங்கள், ஏஜென்ஸி (முகவர்) தபால் அலுவலகங்கள் என்பனவற்றின் எண்ணிக்கை, 1992 இல் - 4018 என்பதிலிருந்து 1993 இல் 4035 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.


1993 இல் தொலைபேசி வசதிகள் 30 உபதபால் அலுவலகங்களுக்கும், பாக்ஸ் இயந்திரங்கள் 13 தபால் அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டன. எதிர் காலத்தில் 100 தபால் அலுவலகங்களுக்கு பாக்ஸ் சேவையை விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய மத்திய தபாற் பரிவர்த்தனை நிலையக் கட்டிடத்துக்கான பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிர்மாண வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப் படும்.

1992 இல் 135,504 ஆக இருந்த மொத்த தொலைபேசி மார்க்கங்கள், 1993 இல் 143, 843 ஆக அதிகரிக்கப்பட்டன. தொலைபேசிக்காக காத்திருப்பவர்களின் எண்ணிக்கையும் 1992 இல் 96, 207 இலிருந்து - 1993 இல் 109,409 ஆக அதிகரித்தது. 1992 இல் வழங்கப்பட்ட புதிய தொலைபேசித் தொடர்புகளின் எண்ணிக்கை 10,607 ஆகும். 1993 இன் முதல் 6 மாத காலப்பகுதியில் 9,407 புதிய தொலைபேசித் தொடர்புகள் வழங்கப்பட்டன.

4 தனியார் நிறுவனங்களினால், வழங்கப்படும் செலுலர் இடம்பெயர் தொலைபேசியும், தொலைக்கொலுத்தி (நாணயம் - அட்டை) அழைப்புப்பெறும் தொலைபேசி நிலையங்களும் பிரபலமடைந்துள்ளன.

## துறைமுகங்கள் - கப்பற்போக்குவரத்து



ஜப்பானிய உதவியுடன், கொழும்புத் துறைமுகத்தில் மேற்கொள்ளப் படும் பிரதான அபிவிருத்தித் திட்டங்கள் :-

கொழும்புத் துறைமுக புதிய புகுமுக வீதி, ஜயா கொள்கலன் இறங்குதுறை 3 உம் 4 உம் ஆகும். இவற்றில், கொழும்புத் துறைமுக புதிய புகுமுக வீதி தற்சமயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஜயா கொள் கலன் இறங்குதுறை (3) 1994 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலும், இறங்குதுறை (4) 1995 திசெம் பரிலுமாக பூர்த்தி செய்யப்பட விருக்கின்றன.

1993 ஆம் ஆண்டில், கையாளப் பட்ட கொள்கலன்களின் எண் ணிக்கை, சரக்குகளின் எடை என்பனவற்றிலும் துறைமுகத்துக்கு வந்த கப்பல்களின் எண்ணிக்கை யிலும் அதிகரிப்பு காணப் பட்டுள்ளது. 1993 சனவரி - ஆகஸ்ட் காலப்பகுதியில், 2230 கப்பல்கள் இங்கு வந்தன. 10,015,172 தொன் பொருட்கள் கையாளப்பட்டன. முந்திய வருடத்தின் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடும்போது முறையே 7.6 %, 22.9 %, 22 % அதிகரிப்பை இவை காட்டுகின்றன.

கொழும்பு டொக்யாட் நிறுவனம் மக்கள்மயப்படுத்தப்பட்டது. இந்த நிறுவனம் இலாபகரமாக செயல்பட வழிவகுக்கும் விதத்தில், இதன் 51 சதவிகிதமான பங்குகள் ஜப்பானைச் சேர்ந்த - ஒனோமிச்சி டொக்யாட்டுக்கு விற்கப்பட்டன.

# வீடமைப்பும் நிர்மாணமும்

15 இலட்சம் வீடுகளை அமைக்கும் 3 வது வெற்றிகரமான வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை அரசாங்கம் தற்சமயம் நடைமுறைக்கிட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளில், அரசாங்கம் மட்டுமல்லாமல், அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட தனியார் துறையினரும் உச்சக்கட்ட ஈடுபாட்டை வழங்கியுள்ளனர்.



1993 சனவரி-ஆகஸ்ட் மாதம் வரைக்குமான பெறுபேறுகள் வருமாறு :-


| வீடமைப்பும் உபதிட்டங்களும்<br>இலக்குக் குழு | பயனடைந்த குடும்பங்களின்<br>எண்ணிக்கை |
|---|---|
| 1. கிராமிய வீடமைப்பும் உப திட்டமும் | |
| குறைந்த வருமான குடும்பங்கள் | 114,601 |
| 2. (அ) நகர வீடமைப்பும் உப திட்டமும், குறைந்த | |
| வருமான குடும்பங்கள் | 20,748 |
| (ஆ) நகரம் (விசேட) நடுத்தர வருமான குடும்பங்கள் | 861 |
| 3. அனர்த்த வீடமைப்பும் உப திட்டம் | 71,743 |
| 4. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோர் மாகாண | |
| சபைகள் வீடமைப்பு | 79,730 |
| 5. மகாவலி வீடமைப்பு உப திட்டம் | |
| மகாவலியில் குடியேறியுள்ளோர் | 16,184 |
| 6. பெருந்தோட்ட வீடமைப்பு உப திட்டம் | |
| தோட்டத் தொழிலாளர் | 38,072 |
| 7. கூட்டுறவு வீடமைப்பு உப திட்டம் | 150,046 |
| 8. ஊழியர் வீடமைப்பு உப திட்டம் | |
| ஊழியர் (தனியார் + அரசாங்க துறைகள்) | 6,477 |
| 9. தனிநபர் வீடமைப்பு உப திட்டம் | |
| தனிநபர் வீடமைப்பாளர் | 226,740 |
| 10. தனியார் வீட்டபிவிருத்தி உப திட்டம் | |
| வெவ்வேறு வருமான குழுவினர் | 325 |
| மொத்தம் | 725,527 |

தொழில்நுட்ப முகாமைத்துவம், நிபுணத்துவ அறிவு என்பனவற்றை அதிகரிக்கவும், பயிற்சியளிக்கப்பட்ட மனித சக்தி வளத்தை வழங்கவுமென உலகவங்கியின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாண - கைத்தொழில் பயிற்சி + அபிவிருத்தி நிலையம் 1989 1993 காலப்பகுதியில், கீழ்க்காணும் பயிற்சிப் பெறுபேற்றை அடைந்துள்ளது.

| திட்டம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 யூன் வரை |
|---|---|---|---|---|---|
| 1. கைப்பணிப்பயிற்சி | 8731 | 10645 | 8197 | 11015 | 2096 |
| 2. மெக்கானிக் பயிற்சி | 173 | 152 | 320 | 450 | 468 |
| 3. இயக்குநர் பயிற்சி | 92 | 214 | 234 | 701 | 488 |
| 4. மேற்பார்வை, முகாமைத்துவப் பயிற்சி | 690 | 788 | 815 | 1112 | 260 |
| 5. வர்த்தக சோதனை | 2050 | 1719 | 1622 | 1986 | 1032 |
| மொத்தம் | 11736 | 13518 | 11188 | 15264 | 4344 |



# நீர் விநியோகம்




நாட்டின் நீர் விநியோக, சுகாதார நிலைமைகளை அபிவிருத்தி செய்யவென அரசாங்கம் தொடர்ந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு ஏற்றதாக தற்போதைய நீர்விநியோக, சுகாதாரத் திட்டங்களைப் புனரமைப்பதிலும், புதிய திட்டங்களைச் செயற்படுத்துவதிலும், முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. நாட்டின் பல பகுதிகளிலும் 50 நீர் விநியோகத் திட்டங்களைப் புனரமைப்பதிலும், புதிதாக நிர்மாணிப்பதிலும் தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபை ஈடுபட்டிருந்தது. இதில் செலவிடப்பட்ட தொகை ரூபா. 2,840/- மில்லியன்களாகும். இதனால் 334,900 மக்கள் நன்மையடைந்துள்ளனர்.

1993 செப்டெம்பர் மாதமளவில், ரூ. 7,795/- மில்லியன் வெளிநாட்டு உதவியுடன், கீழ்க்காணும் பிரதான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன :-

| திட்டம் | நன்மையடைவோரின் எண்ணிக்கை | முக்கிய நோக்கம் |
|---|---|---|
| (1) ஆ. அ. வங்கி உதவி பெற்ற நீர் விினியோகத்திட்டம் | 800,000 | 28 நீர் விநியோகத்திட்டங்களைப் புனரமைத்தல். |
| (2) கொழும்பு பெரும்பாக வடிகால் திட்டம் | கிடைக்க வில்லை | கொழும்பு பெரும்பாகப் பகுதியில் வடிகாலமைப்பை அபிவிருத்தி செய்தல் |
| (3) குருணாகல நீர் . வி + சுகாதாரத் திட்டம் | 28,000 | 1000 ஆழ்கிணறுகளையும், 5000 கழிப்பிடங்களையும் அமைத்தல். |
| (4) புத்தளம் நீர் வி. திட்டம் | 85,000 | அங்குள்ள தற்போதைய திட்டத்தை அபிவிருத்தி செய்தல். |
| (5) கண்டி மாவட்ட நீர் வி. திட்டம் | 114,650 | தற்போதைய திட்டங்களை அபிவிருத்திசெய்தல் |
| (6) அம்பத்தளை தலைமை நிலையம் (மேலதிகம்) | 900,000 | கொழும்பு பெரும்பாக பிரதேச நீர் விநியோகத்தை அபிவிருத்தி செய்யவென அம்பத்தளை நிலையத்தை பலப்படுத்தல் |
| (7) மகரகம நீர் வி. திட்டம் | 11,000 | மகரகம, கெஸ்பாவ பிரதேசசபை பிரிவுகளில் வாழும் மக்களுக்கு சுத்தமான நீரை வழங்குவதற்கான திட்டம் |
| (8) அநுராதபுர மாவட்டம் நீர் வி. திட்டம் | 18,000 | குழாய்க்கிணறுகள், கை நீர் இறைக்கும் யந்திரங்கள் மூலம் சுத்தமான நீரை அங்குள்ள கிராம மக்களுக்கு வழங்கல் |
| (9) சிலாபம் நீர். வி. திட்டம் | 38,000 | தற்போதைய நீர் விநியோகத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல் |
| (10) கொழும்பு – கிழக்கு நகரங்களுக்கான | 125,000 | மகரகம, பன்னிப்பிட்டிய, பத்தரமுல்ல, தலவத்துகொடவுக்கு நீர் விினியோகவழியை விஸ்தரித்தல். |

இவற்றைத்தவிர, உலகவங்கியின் உதவியுடன் கிராம மக்களுக்கென – சமூக நீர் விநி யோக சுகாதாரத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாத்தறை, இரத்தினபுரி, பதுளை மாவட்டங்களில், ரூ. 1400 மில்லியன் செலவில் இவை நடைமுறைக்கிடப் படுகின்றன.



# காணிகள்

வறுமை ஒழிப்பு சம்பந்தமான மற்றுமொரு நடவடிக்கையான காணியற்றவர்களுக்குக் காணிகளை அரசாங்கம் தொடர்ந்தும் வழங்கி வருகிறது. காணிப்பாவனை விநியோகம் சம்பந்தமான சனாதிபதி துரித நடவடிக்கைக் குழு மூலம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பயன்படுத்தப்படாத அரச காணிகளின் உபயோகம், அபிவிருத்தி, விநியோகம் என்பன சம்பந்தமான வழிகாட்டி நெறிகளும் குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ளன.

*1993 ஒகத்து மாத இறுதியளவில் காணி விநியோகம் சம்பந்தமான நிலைமை வருமாறு :-*


| *காணி விபரம்* | *இனங்காணப் பட்டவை (ஏக்கர்)* | *விநியோகிக்கப் பட்டவை (ஏக்கர்)* | *காணி பெற்றவர்கள்* |
|---|---|---|---|
| அரச காணிகள் | 709,846 | 299,596 | 297,838 |
| கா. அ. கூ. காணிகள் - | | | |
| மேட்டு நிலங்கள் | 28,188 | 19,501 | 35,908 |
| நெல் | 6,463 | 569 | 555 |
| பெருந்தோட்ட நிலம் | 11,799 | 7,341 | 17,811 |
| மகாவலி மேட்டுநிலம் | 2,995 | 2,117 | 4,234 |
| | 759,291 | 329,124 | 356,346 |

# நீர்ப்பாசனமும் மகாவலியும்

1992 இல் ஆரம்பிக்கப்பட்ட தேசிய நீர்ப்பாசன புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 37,500 ஹெக்டயர் விஸ்தீரணமான பிரதேசத்தில் 1000 சிறிய குளங்களும் 60 பெரிய / நடுத்தர குளங்களும் புனரமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றன. விவசாயிகள் கழகங்கள் அமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும்.

வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்தித் திட்டம் 1993 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 6,300 ஹெக்டயர் நிலத்துக்குப் பாசன வசதியளிக்கும் 300 சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் புனரமைப்பு ; 18,600 ஹெக்டயர்க்கு பாசன வசதி அளிக்கும் 300 சிறிய, 17 நடுத்தர, 5 பிரதான திட்டங்களின் அபிவிருத்தி, 800 ஹெக்டயர் நிலத்துக்குப் பாசன வசதியளிக்கவென நடுத்தர மற்றும் 30 கைவிடப்பட்ட சிறிய திட்டங்கள் என்பனவற்றின் புனரமைப்பு, பாசனப்பிரதேசத்தை 300 ஹெக்டயர்களால் அதிகரிக்கவென தற்போதைய 4 திட்டங்களின் பாசன வசதியையும் வடிகால் அமைப்பையும் விஸ்தரித்தல் என்பன இவற்றில் அடங்கியுள்ளன.

1991 இல் ஆரம்பிக்கப்பட்ட மின்பே-நாகதீப நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அவற்றினால் பாசன வசதி பெறும் முறையே 6000 ஹெக்டயர், 1700 ஹெக்டயர் காணிகள் நன்மையடையவிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனக் கால்வாய்களும், அவற்றோடு இணைந்த அமைப்புக்களும் புனரமைக்கப்படவிருக்கின்றன. ஹீன்கன்ன நீர் எடுக்கும் அமைப்புக்கள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டு நாகதீப நீர்த்தேக்கமும் புனரமைக்கப்படும். இந்தத்திட்டத்தின் மூலம் விவசாய உற்பத்தி அதிகரிக்கப்பட்டு ஸ்திரநிலை அடைவது மாத்திரமல்லாமல், விவசாயிகளின் வருமானமும் அதிகரிக்கும்.



## வடமேல் மாகாண விசேட நீர் விநியோகத் திட்டம்

வடமேல் மாகாண விசேட நீர் விநியோகத் திட்டம் 12 நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைக்கவென 1990 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 4000 ஹெக்டயர்கள் இதனால் பயனடைந்துள்ளன. 7 திட்டங்களில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 3 திட்ட வேலைகள் இந்த வருட முடிவுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும். பூர்த்தி செய்யப்பட்ட 7 திட்டங்களின் மூலம் 3000 ஹெக்டயர் நிலம் பயனடைந்துள்ளது.

அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், பிரதான கால்வாய்கள் உட்பட பிரதான நிர்மாண வேலைகளை மகாவலி அதிகாரசபை அமைத்து நிர்வகித்து வருகிறது. இனப்பிரச்சினை இல்லாத இடங்களில் வீதிகள், கட்டிடங்கள், கால்வாய்கள், வயல் வாய்க்கால்கள், ஏனைய பொதுவசதிகள் பூர்த்தி செய்யப்படவிருக்கின்றன.

குடும்பங்களைக் குடியேற்றும் நடவடிக்கையில் 90 சதவீதமான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. 1992 இல் 4888 குடும்பங்களும், 1993 இல் ஒகத்து வரை 3,541 குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டுள்ளன. 1992 இல் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 3477 ஆகும். 1993 இல் 1877 வீடுகள் கட்டப்பட்டன. பெருந்தொகைப்பணம் செலவிடப்பட்ட இந்த மகாவலித்திட்டத்தில் - அதிகரித்த வேலை வசதி சம்பந்தமாகவும் குடியேற்றவாசிகளின் வருமானத்தை அதிகரிப்பது பற்றியும் கவனம் செலுத்தப்படுகிறது. இவற்றால் கிடைக்கும் நன்மைகள் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதாக அமைந்துள்ளன.

1991/92 பெரும்போகத்திலும், 1992 சிறுபோகத்திலும் முறையே 82,919, 34,549 ஹெக்டயர் காணியில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இருபோகங்களிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட நெல் 405,728 மெற்றிக் தொன்கள் ஆகும்.


மகாவலிப் பண்ணைகளில் 1992 ஆம் ஆண்டில் 1,546,453 லீட்டர் பால் பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்த வருட முதல் 8 மாத காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பால் 1,144,125 லீட்டர்களாகும். இமுவைமாடுகள் - பண்ணை உற்பத்திப் பொருட்திட்டம் இவற்றைச் செயற்படுத்துகிறது. இரு வருடங்களிலும் முறையே 345,462 கால்நடைகள் உற்பத்தி செய்யப்பட்டன. கால்நடை அபிவிருத்தி சேவைகள் திட்டத்தின் கீழ் 1992, 1993 ஆம் ஆண்டுகளில், 718,482 கால்நடைகள் விவசாயிகளுக்கு விற்கப்பட்டன.

மகாவலி விவசாய - கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஏற்றுமதிச் சந்தைக்கென 1993 ஜனவரி - ஒகத்து காலப்பகுதியில் பதனிடப்பட்ட பொருட்களின் எடை 21,932 கி. கிறாம் ஆகும். இதனைத் தவிர இந்தக் காலப்பகுதியில் உள்ளூர் சந்தைக்கென உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் 22,037 கி. கிராம்.

மகாவலிப் பகுதியில் மேற்கொள்ளப்படும் வேலைவாய்ப்பு, மூலதனம், தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்களை தனியார் துறையினர் ஆரம்பிக்க இவை ஊக்கமளிக்கின்றன. 1993 ஒகத்து வரை இவை மூலம் 639 வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன. சந்தை நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யவென 1993 ஆம்

ஆண்டின் 2 ஆம் தவணையின் போது உடவலவ பொதி செய்யும் நிலையம் அமைக்கப்பட்டது. விவசாய மூலதனத்தை அதிகரிக்கவென 1992 இல் 11 காணிகள் முதலீட்டாளரிடம் கையளிக்கப்பட்டன. மொத்தம் 102 காணிகள் கொடுக்கப்பட்டன. 41 இல் முழு அளவிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மகாவலிப் பகுதியில் முக்கிய நீர்ப்பாசன வேலைகளைப் புனரமைக்கவும், நீர் முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்து பராமரிப்பு வேலைகளை விவசாயிகள் பொறுப்பேற்று நடத்த ஊக்கமளிக்கவும் வேண்டிய பூர்வாங்க நடவடிக்கைகளை செயற்படுத்தவென கொள்கை ரீதியில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது. வர்த்தக நடவடிக்கைகளும் தனியார் மயப்படுத்தப்படும். மகாவலிப்பகுதியில் துரித வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் நிச்சயிக்கவென அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.




## உல்லாசப் பிரயாணம்

உல்லாசப் பிரயாணத் தொழிலில் குறிப்பிடத்தக்க மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. நாட்டின் அபிவிருத்தியடைந்த நிலையே இதற்கான காரணமாகும். 1992 செப்டம்பர் / 1993 ஓகஸ்ட் காலப்பகுதியில் சுற்றுலாப்பயணிகளின் வருகையில் 6.8% அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. முந்திய வருடத்தின் இதே காலப்பகுதி எண்ணிக்கையான 3,72,822 உடன் ஒப்பிடுகையில், இந்தக் கால எண்ணிக்கை 3,98,040 ஆகும்.

1992 ஆம் ஆண்டின் வெளிநாட்டு நாணயமாற்று வருமானம் ரூபா 8,700 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1991 இன் வருமானத்திலும் பார்க்க, இது 34% அதிகரித்துள்ளதாகும்.

உல்லாசப் பிரயாணத்துறையை அபிவிருத்தி செய்யவென பெருமளவில் மேற்கொள்ளப்பட்ட பிரச்சார நடவடிக்கைகள் காரணமாக விமான நிலையங்கள், நாட்டிலிருந்து வாபஸ் பெறும் போக்கு, மாறுதல் கண்டது.

சுற்றுலாத் துறையின் உயர்கட்ட அபிவிருத்தியை நிச்சயிக்கவென உல்லாசப் பிரயாண சபை முக்கிய கவனம் செலுத்தியிருந்தது. 36 புதிய ஹோட்டல் திட்டங்களை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இதன் காரணமாக, ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கை 2,124 ஆல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.





இதுவரை, பாரம்பரிய துறைகள் சம்பந்தமாகவே உல்லாசப் பிரயாண அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டது. இது, ஏனைய துறைகளுக்கும் விஸ்தரிக்கப்படுவதன் மூலம், பிராந்திய சமநிலை பேணப்படும்.

# சமூக வசதிகள்



## கல்வி

ஆசிரியர்களின் தொழில் ரீதியான அபிவிருத்திக்கென கடந்த சில வருடங்களில் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ்மொழி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கவென



ஸ்ரீபாத கல்விக் கல்லூரி 1992 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. சமீபத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 35,000 பயிலுநர் ஆசிரியர்களுக்கு "சீடா" வின் உதவியுடன் துரித தொலைக்கல்விப் பயிற்சித் திட்டத்தைத் தேசியக் கல்வி நிலையம் ஆரம்பித்துள்ளது. 20,000 பயிற்சி பெறாத பட்டதாரி ஆசிரியர்களுக்கு போதனா பயிற்சி அளிக்கவென ஆசிரியர்களுக்கான பட்டதாரி பின்படிப்பு பாட நெறியை இந்த நிலையம் தொடக்கியுள்ளது.

மக்களிடம் நிர்வாகத்தை எடுத்துச் செல்லும் இலக்கில் ஒரு பகுதியாக, கல்வி நிர்வாகத்தை பிரதேச செயலகங்களில் அமைக்கும் நோக்கில் கல்வி மாவட்டங்கள் புதிதாக திட்டமிடப்பட்டள்ளன. பிரதேச செயலகங்களுடன் இவை இணைந்து பணியாற்றும். 1992 இல் 110 ஆக இருந்த கல்வி மாவட்டங்கள், 1993 இல் 296 ஆக அதிகரித்துள்ளன.

# சுகாதாரம்



இலங்கையின் தேசியச் சுகாதாரக் கொள்கையை உருவாக்கவென 1992 இல் துரித நடவடிக்கைக் குழுவொன்று அமைக்கப்பட்டது. தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கென - தேசிய சுகாதாரக் கொள்கை யின் அடிப்படையிலானதும், 1993 - 2002 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், திறமை, சக்தியுடமை, சகல விடயங்களையும் உள்ளடக்கல் என்பனவற்றை அடையக் கூடியதுமான சுகாதார அபிவிருத்திக்கான விரிவான திறமைத் திட்டமொன்று அமைக்கப்பட வேண்டுமென்று - துரித நடவடிக்கைக் குழு ஆலோசனை விடுத்துள்ளது.

சுகாதார நிர்வாகத்தைப் பிரிவு மட்டத்தில் பன்முகப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, 200 சுகாதார சேவைகள் பிரிவுப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பிரிவிலும், குறைந்தது ஒரு ஆஸ்பத்திரியாவது - அவசர சிகிக்சைப் பிரிவு, சுகாதாரக் கல்விப் பிரிவு, ஆய்கூடம், வாகனங்கள், தொலைத்தொடர்புச் சாதனங்கள் இருக்கக்கூடிய வகையில், பிரிவு மட்ட சுகாதார வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. 10 கிராம ஆஸ்பத்திரிகளுக்கான உபகரணங்களையும், நாட்டின் சுகாதாரச் சேவைக்கென 100 அம்புலன்ஸ் வாகனங்களையும் ஜப்பானிய அரசாங்கம் வழங்க ஆரம்பித்துள்ளது.

உலக வங்கியின் உதவி பெற்ற, சனத்தொகை - சுகாதாரத் திட்டத்தின் கீழ், 99 கிராமோதய சுகாதார நிலையங்கள், 8 உப பிரிவு சுகாதார நிலையங்கள், 3 பிரிவுச சுகாதார நிலையங்கள், என்பன காலி, மாத்தளை, பொலன்னறுவை மாவட்டங்களில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

காலி மாவட்டத்தில், இந்தத் திட்டத்தின் கீழ், 13 சுகாதாரச் சேவைகள் பிரிவுப்பணிப்பாளர்களுக்கான நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மலேரியா கட்டுப்பாடு, வயிற்றோட்ட நோய் கட்டுப்பாடு, சுகாதாரக் கல்வி நடவடிக்கைகள், சம்பந்தமான விசேட திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

பினிடாவின் நிதியுதவி பெற்ற கொழும்பு பெரியாஸ்பத்திரி புனரமைப்புத் திட்டமும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஐந்தாம் மாடிக்கட்டிடம் முற்றாகத் திருத்தப்பட்டுள்ளது. புதிய கால்வாய்கள், நீர்விநியோகம், மின்விநியோகம், நான்கு அறுவைச் சிகிச்சைக்கூடங்கள், தீவிர சிகிச்சைப் பிரிவு என்பன அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. ஆஸ்பத்திரிக்

கட்டிடங்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு நீரை விநியோகிக்கக்கூடிய நீர்த்தாங்கி அமைக்கப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரி ஊழியர்களும் பயிற்சி பெற்றுள்ளனர். திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், வாகனங்களை நிறுத்துவதற்கும் திருத்துவதற்குமான புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நான்காம் மாடி, வைத்திய வார்ட் கட்டிடம், களஞ்சியசாலை என்பன சம்பந்தமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து சுகாதாரத்துறைக்கென 25.1 அமெரிக்க டொலர்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அநுராதபுரம், குருநாகல், நுவரெலியா மாவட்டங்களில் சுகாதாரம் மற்றும் சனத்தொகை இரண்டாவது திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட 35 ஆஸ்பத்திரிகளை அபிவிருத்தி செய்யவென பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



## கலாசார அலுவல்கள்

"மகாவம்ச கீதய" பூர்த்தி செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

1993 அரச இலக்கிய விழா நடத்தப்பட்டு பரிசுகளும் விருதுகளும் வழங்கப்பட்டன. இது தொடர்பாக 10 பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

சிங்கள அகராதி தொகுப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. மாணவர்களுக்கென சிங்கள - ஆங்கில திரட்டு அகராதி தயாரிக்கப்படுகிறது.

பாரம்பரிய கலைகளை அபிவிருத்தி செய்யவும், பாதுகாக்கவுமென ஆரம்பிக்கப்பட்ட கலா நிலையங்களின் மாணவர்களுக்கென பரீட்சை ஒன்று நடத்தப்பட்டது.

அழியும் நிலையிலிருந்த பாரம்பரிய வழிபாட்டு மரபுமுறைகளைப் பாதுகாக்கவென 3 பலியாக பிரார்த்தனை நிகழ்ச்சிகள் யூனெஸ்கோ உதவியுடன் வீடியோப் படம் பிடிக்கப்பட்டன.

இசையின் உன்னத சக்தியை இளம்சந்ததியினர் அறிந்துகொள்ள உதவும் விதத்தில், 14 பிரதேச இசைவிழாக்கள் நடத்தப்பட்டன. 1993 திசெம்பரில் அரச இசைவிழா நடத்தப்படவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

# தொழிற்பயிற்சியும் இளைஞர் புனர்வாழ்வும்

நாட்டின் பொருளாதாரத் தேவைக்கு ஏற்றவிதத்தில் தொழிற்கல்வியையும், பயிற்சியையும் திட்டமிட்டு ஒன்றிணைக்கவென மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவையும், தேசிய தொழிற்பயிற்சி, கைத்தொழிற்பயிற்சி நிலையத்தையும் அரசாங்கம் அமைத்துள்ளது. 1993 யூன் 30 ஆந் திகதிவரை மூன்றாம் நிலை தொழிற்பயிற்சிக் கல்வி மற்றும் பயிற்சியை வழங்கும் 1,096 அரச - தனியார் நிறுவனங்களை மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழு பதிவு செய்துள்ளது. புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தினால் மேற் கொள்ளப்படும் புனர்வாழ்வுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் :- தடுப்பு முகாம்களிலிருந்து இளைஞர் புனர்வாழ்வு பெறுவதற்கென அனுப்பப்பட்ட இளைஞர்கள், சமுதாயத்தில் மீண்டும் ஒன்றிணைவதை உறுதிப் படுத்துவதாகும். இந்தத் திட்டத்திற்கு அரச - தனியார் நிறுவனங்களும், சங்கங்களும், தேவாலயங்களும், கோவில்களும், வங்கிகளும் தாமாகவே முன்வந்து உதவுகின்றன. தனிப்பட்டவர்களும் உதவி வருகின்றனர்.

புனர்வாழ்வுக் காலத்தில் இளைஞர்களுக்குப் பலதரப்பட்ட தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டன. 8,097 இளைஞர்கள் பயிற்சியை முடித்துக் கொண்டுள்ளனர். மேற்பயிற்சிக்கென 76 பயிற்சியாளர்கள் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டனர். இதுவரை 11,069 இளைஞர்கள் புனர்வாழ்வு பெற்று சமுதாயத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தின் அமுலாக்கத்திற்கென, இதுவரை அரசாகம் 168,15 ரூபாவைச் செலவிட்டுள்ளது.



## பட்டதாரிகள் தொழில்நெறி ஒதுக்கீட்டுத் திட்டம்

பட்டதாரிகள் தங்களுக்குப் பொருத்தமான வேலைகளைப் பெற உதவும் விதத்தில், பலதரப்பட்ட துறைகளிலும் அவர்களது திறமையை அபிவிருத்தி செய்யவும், பயிற்சியைப் பெற்றுக்கொள்ளவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கவென இந்தத்திட்டம் உருவாக்கப்பட்டது. 1992/93 ஆம் வருடத்தில் 8,000 பட்டதாரிகள் தங்களைப் பதிவு செய்திருந்தனர்.

இந்தப் பட்டதாரிகள் தனியார் நிறுவனங்களுக்கு அனுப்பப்படுவதை ஒன்றிணைக்கவென 10 மனித சக்திவள தொழில்நெறி ஒதுக்கீட்டு நிறுவனங்களை அரசாங்கம் ஏற்கனவே நியமித்துள்ளது. பயிற்சிக்கென 4,057 பட்டதாரிகளின் பெயர்கள் இவற்றிடமும், தனியார் நிறுவனங்களிடமும் ஒப்படைக்கப்பட்டு உள்ளன.

பன்முகப்படுத்தல் திட்டமிடலில் (திட்ட) உதவிப்பணிப்பாளர்களுக்கான பயிற்சித் திட்டமொன்றை ஆரம்பிக்க உதவி பெறும் வகையில் உணவு விவசாய ஸ்தாபனத்துடன் அரசாங்கம் பூர்வாங்க பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தது.

எம்முடன் பதிவு செய்து கொண்ட 4,376 பட்டதாரிகள் - கல்வி உயர்கல்வி அமைச்சினால் பயிலுநர் ஆசிரியர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## புனர்வாழ்வும் புனரமைப்பும்

பிரச்சினை காரணமாகப் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கு புனர்வாழ்வும் நிவாரணமும் அளிக்கப்பட வேண்டுமென்பதற்கு அரசாங்கம் அதி உயர் முன்னுரிமை அளித்துள்ளது. சேதமாக்கப்பட்ட அல்லது முற்றாக அழிக்கப்பட்ட பொதுவசதிகளைப் புனரமைப்பதற்கும் முதலீடும் அளிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு வழமையான உற்பத்தி சார்ந்த வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கென கடன் வசதித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 95,000 இடம்பெயர்ந்த குடும்பத்தினர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

உதவி வழங்கும் நாடுகளின் உதவியுடன் 493 மில்லியன் டொலர் பெறுமதியான அவசர புனர்வாழ்வு - புனர்நிர்மாண நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டத்தில் மொத்தம் 8,734 மில்லியன் ரூபா இதுவரை செலவிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்த பிரதான துறைகள் :- கல்வி, மனிதவளம், சுகாதாரம், விவசாயம், கடற்றொழில், தபால் - தொலைத்தொடர்புகள், நீர்ப்பாசனம், மின்சக்தி, வீதிகள் போக்குவரத்து, பொதுச்சந்தைகள், பொதுக்கட்டிடங்கள் என்பனவாகும்.

4 இலட்சத்துக்கும் அதிகமான பாதிக்கப்பட்ட குடும்பங்கள் முகாம்களில் தங்கியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உணவுப்பொருளுதவி, குடியமர்தல் அலவன்ஸ், உற்பத்தி தரும் தொழில் ஆரம்பிக்கவென நிதிஉதவியும், கடன்வசதியும், பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கவென நட்டஈடுகள், சேதமான/முற்றாக அழிந்த வீடுகளைத் திருத்தவும் புனரமைக்கவுமென நிதிஉதவி என்பன இவர்கட்கு வழங்கப்படுகின்றன.



இடம்பெயர்ந்தவர்களின் நலனைக் கவனிப்பதற்கென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளனர். முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள 6 இலட்சம் பேருக்கும் உணவு உதவி வழங்கப்படுகின்றது. 522 நலன்புரி நிலையங்கள் அவரால் நிர்வகிக்கப்படுகின்றன. இங்கு தங்கியிருப்பவர்களுக்கு, இருப்பிடம், உணவு, நீர், வைத்தியஉதவி, சுகாதார உதவி என்பன வழங்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளில் அரசாங்கம் - 1990 இல் 987 மில்லியன் ரூபாவும், 1991 இல் 2,700 மில்லியன் ரூபாவும், 1992 - இல் 1,964 மில்லியன் ரூபாவும் 1993 செத்தெம்பர் மாதம்வரை 1,575 மில்லியன் ரூபாவும் செலவிட்டுள்ளது.

# சமூகநலன்

சமூகரீதியிலும், உடல் ரீதியிலும் சக்தி குறைந்த மக்களுக்கு உதவவும், அவர்களது நிலைமையை மேம்படுத்தவுமென, சமூக நலன்புரித் திட்டங்கள் நடைமுறைக்கிடப் பட்டுள்ளன.

போதைப் பொருட் பாவனையிலிருந்து விடுபட்டவர்களுக்கு, நவோதய திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சமூக அடிப்படையிலான புனர்வாழ்வுத்திட்டம் போதைப் பொருள் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள தொண்டர் மற்றும் அரச ஆதரவிலான நிறுவனங்களுடன் தொடர்பேற்படுத்துவதன் மூலம் பலப்படுத்தப்பட்டது. நவோதய திட்டத்திற்கு இந்த வருடம் ஆட்சேர்ப்பதற்கென அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

57 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வெள்ள நிவாரண உதவிகள் ரூபா 5,10,47,239 ஆகும். 4,85,851 குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்கவென 434 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. குடிநீர் வழங்கவென வரட்சியினால் பாதிக்கப்பட்ட பிரிவுகளுக்கு 20 பவுசர்கள் வழங்கப்பட்டன.

முதியோர் நலன் நடவடிக்கைத் திட்டத்திற்கான கொள்கை விளக்கப்பத்திரம் அமைச்சரவையால் கொள்கையளவில் 1993 மார்ச் மாதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனை நடைமுறைக்கிடவென முதுமையடைதல் சம்பந்தமான தேசியக்குழு முயற்சி மேற்கொண்டது. உத்தேசத் திட்டம் சம்பந்தமாக மக்களின் ஆதரவைத் திரட்டவென "வெடிஹிட்டியோ" என்ற சஞ்சிகை தவணை அடிப்படையில் வெளியிடப்படவும் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



வீட்டு வேலையாட்களாக அமர்த்தப்பட்டு துஷ்பிரயோகம் செய்யப்படும் சிறுவர்களைப் பாதுகாக்கவென, வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் மூலம் வெற்றிகரமான பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சகல வித சிறுவர் துஷ்பிரயோகங்களையும் தடுப்பதற்கென மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு திட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன.

சிறுவர்களை வேலையாட்களாக அமர்த்துதல், சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான சட்டங்களைத் திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. கஷ்டமான சூழ்நிலையிலுள்ள சிறுவர்களுக்கு உச்சக்கட்ட சேவைகளை வழங்கும் வகையில், சிறுவர் நன்நடத்தை, சிறுவர் நலத்திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

54 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு உணவுமுத்திரைகளும் 13,45,000 குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரைகளும் வழங்கப்பட்டன. உணவு முத்திரைத் திட்டத்தினால் 1993 இல் அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவினம் 3,160 மில்லியன் ரூபா. பாடசாலைப் பிள்ளைகளுக்கான மதிய உணவையும் உள்ளடக்கும் விதத்தில் உணவுமுத்திரை பெறும் சகல குடும்பங்களுக்கும் மேலும் ரூபா 60 பெறுமதியான உணவுமுத்திரைகளை வழங்குவதற்கெனத் தீர்மானிக்கப்பட்டது.

தேசிய சமூக அபிவிருத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சமூக சேவையில் இளமானி, முதுமானி பாடநெறிகளை இது நடத்தும். சமூக அடிப்படையிலான புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ், சமூக சேவை அதிகாரிகள், கல்வித் திணைக்களத்தின் ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள், தொண்டர்கள், சமூகசேவை வெளிக்கள அதிகாரிகள் ஆகியோருக்கு சம்பந்தப்பட்ட துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.


பெண்களுக்கு சமூகத்தில் சம அந்தஸ்த்தை நிச்சயிக்கவும் அவர்கள் மீதான பாகுபாட்டில் இருந்து அவர்களுக்கு விடுதலை பெற்றுத்தரவுமெனத் தயாரிக்கப்பட்ட "மகளிருக்கான சாசனம்" 1993, மார்ச் 3 ஆம் திகதி அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. பெண்கள் சம்பந்தமான எதிர்காலத் திட்டங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் இந்தச் சாசனம் ஒரு வழிகாட்டியாக இருக்கும். அரசியல் - சிவில் உரிமைகள், குடும்பத்தினுள் கிடைக்க வேண்டிய உரிமைகள், கல்வியும் பயிற்சியும், பொருளாதார நடவடிக்கைகளும் நன்மைகளும், சுகாதாரமும், போஷாக்கும், சமூகப் பாகுபாட்டிலிருந்து பாதுகாப்பு, பால் அடிப்படையிலான வன்செயல்கள் என்பன சம்பந்தப்பட்ட மட்டில் பெண்களுக்குச் சமவுரிமையை உத்தரவாதம் செய்யவென அடையப்பட வேண்டிய சமூக நிலைகள் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.



அபிவிருத்தியில் பெண்கள் என்பது தொடர்பான கொள்கைகளையும் நடைமுறைகளையும் வகுப்பதில், மகளிர் பணியகம் பேருதவி புரிந்துள்ளது. தேசிய - மாவட்ட மட்ட நிகழ்ச்சிகளையும், வருமானம் தரும் திட்டங்களையும் பணியகம் ஒழுங்கு செய்துள்ளது. நோறாட், சர்வதேச தொழில் ஸ்தாபனம், யுனிசெவ், யூ. என். டி. பி. பேன்ற வெளிநாட்டு நிதி வழங்கும் நிறுவனங்களுடனும் அரச சார்பற்ற ஸ்தாபனங்களுடனும் இணைந்து பணியகம் செயற்படுகின்றது.

காந்தா புவத், காந்தா சவிய என்ற 2 சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன. இறப்பர் தோட்ட பெண் தொழிலாளர் சம்பந்தமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கிராமப் பகுதிகளில் 2,112 மகளிர் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

# பொதுப் பொருளாதாரச் செயல்பாடு



சென்ற வருடத்தோடு ஒப்பிடும் போது, 1992 ஒக்டோபர் மாதத்தில் இருந்து 1993 ஒக்டோபர் மாதம் வரைக்குமான காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகளில் கணிசமான அபிவிருத்தி காணப் பட்டுள்ளது. உள்ளூர் உற்பத்தி 6 சதவீதத்தினால் அதிகரித் துள்ளது. 1992 ஆம் ஆண்டில் 179 மில்லியன் கிலோவாக இருந்த தேயிலை உற்பத்தி, மேற்குறிப் பிட்ட காலப்பகுதியில் 220 மில்லியன் கிலோவாக அதிகரித் துள்ளது. 1992 ஆம் ஆண்டின் மொத்த நெல் உற்பத்தியான 2,340 மில்லியன் புசல்களோடு ஒப்பிடுகையில் 1993 ஆம் ஆண்டின் 2,485 மில்லியன் புசல் நெல் உற்பத்தி 6 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. இதன் காரணமாக அரிசி மற்றும் ஏனைய உணவுப் பொருள்களின் விலைகள் இந்தக் காலப்பகுதியில் நியாயமான மட்டத்தில் இருந்து வந்துள்ளன. 1992 ஆம் ஆண்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக தெங்கு உற்பத்தி வீழ்ச்சியடைந்த போதிலும் உப உணவுப்பொருள்கள், காய்கறிகள், மீன், கால்நடை உற்பத்தி என்பன கணிசமான அளவு அதிகரித்திருந்தன.

உள்ளூர் – வெளிநாட்டுத் தனியார் மூலதனத்தின் காரணமாக கைத்தொழில்துறை மிகுந்த உத்வேகத்தைப் பெற்றது. பல சலுகைகள் அனுகூலங்கள் என்பனவும் 10 சதவீத உற்பத்தி அதிகரிப்பும் முதலீட்டாளர்களுக்கு ஊக்கமளித்தன. நாட்டின் பொருளாதாரத்தைத் தாராளமயப்படுத்தலுடன் ஆரம்பிக்கப்பட்ட நம்பகமான போக்கின் தொடர்ச்சியே இதுவாகும்.

தாராளமயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் பலனாக வர்த்தகம், போக்குவரவு, தொலைத் தொடர்பு, வங்கி, காப்புறுதித்துறைகளில் ஏற்பட்ட அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாக சேவைகள் துறையிலும் அபிவிருத்தி காணப்பட்டது. உல்லாசப் பிரயாணிகளின் வருகையிலும் சென்றவருட இதே காலத்துடன் ஒப்பிடும்போது 6.8 சதவீத வளர்ச்சி காணப்பட்டுள்ளது.

இவற்றின் காரணமாக 1991 ஆம் ஆண்டு இறுதித் தவணையில் 14.4 சதவீதமாகவிருந்த வேலையில்லாதோரின் விகிதாசாரம், 1992 ஆம் ஆண்டு இறுதித் தவணையில் 13.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.


இந்தக் காலப்பகுதியில், அரசாங்கச் செலவினங்களும் திருப்திகரமான முறையில் அமைந்திருந்தன. வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையும் முன்னர் எதிர்பாக்கப்பட்டத்திலும் பார்க்க சாதகமாக இருந்தது.

1993 மே மாதத்தில் இருந்து மூலதனச் சந்தையில் ஏற்பட்ட மறுமலர்ச்சி முக்கிய அம்சமாகும். பங்குப்பரிவர்த்தனை நிலைய நடவடிக்கைகள் கணிசமான அளவு அதிகரித்துள்ளன. 1989 ஆம் ஆண்டில் இந்தச் சந்தை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி 90 மில்லியன் ரூபாவாகவிருந்தது. 1992 ஆம் ஆண்டில் - இது 3 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. மூலதனமிடுவோரின் எண்ணிக்கையும் 2,000 இல் இருந்து 4,000 ஆக அதிகரித்துள்ளது.

பொருள்களினதும் சேவைகளினதும் ஏற்றுமதியிலும் திட்டவட்டமான வளர்ச்சி காணப்பட்டது. தைக்கப்பட்ட ஆடைகள், புடவைகள், உட்பட உற்பத்திக் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட அபிவிருத்தி காரணமாக இறக்குமதிகளும் அதிகரித்துள்ளன. பாரம்பரியமற்ற பொருள்களின் ஏற்றுமதியும் 1993 ஆம் ஆண்டில் கணிசமான அளவு அதிகரிதிருந்தது.

சென்மதி நிலுவைக்கான ஏற்றத்தாழ்வும் வீழ்ச்சியடைந்துள்ளது. உல்லாசப் பிரயாணிகளின் வருகையும் அதிகரித்ததனால், சேவைத்துறையின் நிலுவையும் நம்பகமான நிலையில் இருந்தது. வெளிநாட்டு மூலவளங்களின் உள்பாய்ச்சல் காரணமாக மொத்த நிலுவையும் 15 பில்லியன் ரூபா மேலதிகத் தொகை என்ற நிலைக்கு அதிகரித்தது. நீண்டகாலக் கடன்கள், நிதியுதவிகள், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என்பன இவற்றில் முக்கிய அம்சங்களாகும். இந்தக் காலப்பகுதியில் வெளிநாட்டு றிசேர்வ் நிலைமை எஸ். டீ. ஆர் 1,348 பில்லியன் என்ற அளவுக்கு பலமடைந்திருந்தது. 6 மாதகால இறக்குமதிகளுக்கு இது போதியதாகும். உத்தியோகபூர்வ றிசேர்வ் நிலைமை 4.3 மாதகால இறக்குமதிகளுக்குப் போதியதாகவிருந்தது. ஏற்றுமதி வருமானம் அதிகரித்ததனால், கடன் மீளளிப்பு விகிதசாரம் 15.5 ல் இருந்து 13.9 சதவீதமாக, முந்திய வருடத்தோடு ஒப்பிடுகையில், குறைந்துள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபையைத் தொடர்ந்து நாடு முழுவதிலும் வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்ள வகை செய்யும் விதத்தில் சட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. வெளிநாட்டு மூலதனம் கணிசமான அளவு அதிகரித்தது. 1992 ஆம் ஆண்டில் எஸ். டீ. ஆர். 103 மில்லியன் ஆக இருந்த இந்தத் தொகை 1993 இல் எஸ். டீ. ஆர். 160 மில்லியனாக அதிகரித்தது.



அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் ஏற்படும் தாக்கங்களைக் குறைப்பதில் மக்கள் மயப்படுத்தும் திட்டமும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களைப் புனரமைக்கும் நடவடிக்கையும் முக்கிய இடத்தைப் பெற்றன. இதன் காரணமாக கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு, ஏனைய நலன்புரித் திட்டங்களில் அதிகரித்த பணத்தை அரசாங்கம் செலவிட — இது வழிவகுத்துள்ளது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.